RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 9 • இதழ் 11 • மே 2025 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# சூழல் அறிவோம்

## சிறப்பிதழ்

# இயற்கையான தேர்வே உங்கள் ஸ்டைல் !

ராம்ராஜ் காட்டனின் தனித்துவமிக்க லினன் சட்டைகளின்
ஒப்பற்ற சுகத்தை அனுபவியுங்கள்.
சிறந்த ரசனை கொண்டவர்களுக்காகவே
வடிவமைக்கப்பட்ட எங்கள் கலெக்ஷன்,
அனைத்துச் சூழல்களுக்கும்
ஏற்ற வகையில் உடலுக்கு இதம் அளிக்கிறது.

LINEN PARK®

SHIRTS • TROUSERS • FABRICS

By RAMRAJ



STORE LOCATION


Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

இயற்கையின் இயல்புகளில் பாடம் படித்து
சுற்றியிருக்கும் மனிதர்களிடம் நிறைய கற்று
நற்சிந்தனைகளுடன் வாழும் வழி சொல்லும்

# சூழல் அறிவோம்
## சிறப்பிதழ்

**என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

‘மனிதர்கள் இல்லாமல் பறவைகளால் வாழ்ந்துவிட முடியும். ஆனால், பறவைகள் இல்லாமல் மனிதர்களால் வாழவே முடியாது’ என்றார் பறவையியல் அறிஞர் சலீம் அலி. பறவைகள் இல்லாத ஓர் உலகில், பூச்சிகள் பெருகி மனித இனத்தையே இல்லாமல் செய்வதற்கு சில நாட்கள் போதும் என்கிறார்கள். இந்த மண்ணில் பிறக்கிற ஒவ்வொரு உயிரும் இந்தச் சூழலை அறிந்தும், அதைப் பாதுகாப்பதன் அவசியம் உணர்ந்தும் வாழ்கின்றன. மனிதர்களின் சுயநலமே, சூழலின் முக்கியத்துவத்தை அறிவதைத் தடுகிறது. சூழலை அறிவதன் மூலமே சுயநலத்தை குறைக்கவோ, இல்லாமல் செய்யவோ முடியும்.

இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்பு வரை சூழலை நன்கு அறிந்தே நம் முன்னோர்கள் வாழ்ந்தனர். ‘வீட்டுக்கு முருங்கை மரம், வெயிலுக்கு வேப்ப மரம்’, ‘தட்டாம்பூச்சி தாழப் பறந்தா தப்பாம மழை வரும்’, ‘இளைச்சவனுக்கு எள்ளு, கொழுத்தவனுக்கு கொள்ளு’ போன்ற பழமொழிகள் அன்றாடம் காதில் விழும். ‘குருவி சேர்க்கிற மாதிரி சேர்த்தேன்’, ‘ஆடு நனையுதென்று ஓநாய் அழுததாம்’ என தங்களின் ஒவ்வொரு செயலிலும் சூழலின் பிரதிபலிப்பை வெளிப்படுத்துவார்கள். தண்ணீரை யாராவது குறைத்துப் பேசினால், ‘தாயைப் பழிச்சாலும் தண்ணிய பழிக்கக் கூடாது’ என எச்சரிக்கை வரும்.

நம்மைச் சுற்றி வாழும் சிறிய எறும்பு முதல் பெரிய மாடுகள் வரை அனைத்தையும் பற்றி அறிந்து கொள்வதே சூழல். நம்மைச் சுற்றி இருக்கிற மனிதர்களை அறிவதும் சூழலை அறிதல்தான். நேரம், இடம், மக்கள், இயற்கை என அனைத்தையும் உள்ளடக்கியதே சூழல். அவற்றைச் சார்ந்ததே நம் வாழ்வு. எந்த ஒரு செயலையும் நம் சூழல் அறிந்து செய்தால் வெற்றி நிச்சயம். சூழலை அறிவதுதான் நாம் செய்ய வேண்டிய முதன்மையான பணி. பெரிய பெரிய விஷயங்களை அறிந்துகொள்வதில் இருக்கும் ஆர்வம், சின்னச் சின்ன விஷயங்களை அறிவதில் இல்லை.

‘எதிரிகள் சூழ்கிறார்கள், போர் வரப்போகிறது’ என்கிற தகவலை மன்னரிடம் சொல்ல குதிரையில் பறந்து செல்கிற ஒற்றன் ஒருவன், தான் பயணிக்கும் குதிரையின் காலில் லாடம் சரியாக இல்லை என்கிற சிறிய அறிதலின்றி தொடர்ந்து பயணிக்கிறான். குதிரையின் காலில் ஆணி ஏறி, குதிரையால் ஓடமுடியாமல் நின்றது.



உரிய நேரத்தில் தகவலைக் கொண்டு சேர்க்க முடியாமல் போனதால் எதிரிகள் போரில் வெற்றி பெற்றதாக ஒரு கதை சொல்வார்கள். போர் அளவுக்குப் போகவேண்டியதில்லை. ஒரு வேலையாக அவசரமாகச் செல்லும்போது இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் இருக்கிறதா என்பதை கவனிக்கத் தவறுவதில் நம் வேலையே தடைப்படும்.

ஒரு தோட்டத்தில் மரங்களை நடுவதற்குக் குழி பறிக்க இரண்டு பேர் நியமிக்கப்பட்டனர். ஒரு குழிக்கு இவ்வளவு கூலி என ஒப்பந்தம் ஆனது. ஓய்வில்லாமல் குழி வெட்டிய முதலாமவரைவிட, அடிக்கடி ஓய்வெடுத்து வெட்டிய இரண்டாம் நபர் நிறைய குழிகளை வெட்டினார். 'நம்மைவிட குறைந்த நேரம் உழைக்கிறவன் அதிக குழிகளை வெட்டி அதிகம் சம்பாதிக்கிறான். அதிகம் உழைத்தும் நாம் குறைவாக சம்பாதிக்கிறோமே' வருந்திய முதலாமவர், ஓய்வெடுக்கிறபோது இன்னொருவர் என்ன செய்கிறார் என்று கவனித்தார். அவர் ஓய்வாக உட்காரும்போது தனது உபகரணங்களைத் தீட்டி கூர்மைப்படுத்தியபடி இருந்தார். அதன்பிறகு மீண்டும் குழி பறித்தபோது அவரால் வேகமாகச் செய்ய முடிந்தது. தொடர்ந்து குழி மட்டுமே பறிக்கிற முதலாமவர், தன் உபகரணங்கள் கூர் மழுங்கி இருப்பதை அறிந்தார். அதன்பின் அவரும் ஓய்வில் கூர்தீட்டி, குறைந்த நேரத்தில் அதிக குழிகளைப் பறித்து நிறைய சம்பாதித்தார் என நேர மேலாண்மைக்கு உதாரணம் ஒன்று சொல்வார்கள்.

நாம் செய்கிற வேலையின் தன்மை அறிந்து, மேலும் செம்மைப்படுத்தி செயல்படவில்லை என்றால், நம்மால் வெற்றிகரமாக அந்த வேலையை முடிக்க முடியாது. அறிவுத்திறனும், உழைப்பும் உபகரணங்கள் போன்றவை. இரண்டையும் சரியாகப் பராமரிக்காவிட்டால், தொடர்ந்து உழைக்க முடியாமல் போகும்.

காடுகளில் வாழும் பழங்குடி மக்கள் குறைவாகப் பேசுவார்கள், அதிகம் கவனிப்பார்கள். பறவைகளின் சலசலப்பை வைத்து, அடுத்த காட்டில் என்ன நிகழப்போகிறது என்பதை கணிப்பார்கள். மீனவர்களால் காற்றின் திசையை அறிந்து, கடல் பயணத்தைத் தீர்மானிக்க முடியும். மேகக்கூட்டத்தின் நகர்வை வைத்து, மழை வரப்போகிறது என்பதை விவசாயி அறிவார். இந்த அறிவு அனைத்தும் சூழலை அறிவதால் கிடைப்பது. யோகப்பயிற்சியில் மூச்சை கவனிப்பது முக்கியமான பயிற்சி. மனம் குவித்து ஒன்றை அறியத்தொடங்கும்போது அதை நன்றாகப் புரிந்துகொள்கிறோம். பதற்றம், மன அழுத்தம் போன்றவை மூச்சை கவனிக்கும்போது குறைகிறது.

ஒரு குழந்தை ஏன் அழுகிறது என்பதை தாய் அறிந்திருப்பார். ஏனெனில் குழந்தையின் ஒவ்வொரு அசைவும், அதற்கான காரணமும் தாய்க்குத் தெரியும். குழந்தை பசியில் அழுகிறது, நோவில் அழுகிறது, அழுது அடம்பிடிக்கிறது என அழுகையின் வகைகளைப் பட்டியலிடுவார். ஒரு மருத்துவர் நோயாளியைக் கவனித்து நோயின் தன்மை அறிவார். ஆள்பவர்கள் மக்களின் வாழ்வுநிலையை அறிந்தால்தான் அதற்கேற்ப திட்டங்களை வகுக்க முடியும். தொழிலில் இருப்பவர்கள், வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து செயல்பட்டால் உயர்வு பெற முடியும்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வெற்றி, வாடிக்கையாளர்களின் தேவையை காலம்தோறும் அறிந்து அதையெல்லாம் செய்துகொடுப்பதுதான். வேட்டிக்கான வெண்ணிற பெல்ட், செல்போன் வைக்க கவர், வேட்டியில் பாக்கெட், கட்டுவதற்கு பதிலாக ஒட்டிக்கொள்ள வெல்க்ரோ வேட்டிகள், சட்டையின் வண்ணத்திற்கு ஏற்ப பார்டர் வேட்டிகள், பாரம்பரிய நிகழ்வுகளுக்கான ரெடிமேட் பஞ்சகச்ச வேட்டி, குழந்தைகளுக்கான லிட்டில் ஸ்டார் வேட்டிகள் என ஒவ்வொரு புதிய முயற்சியும் வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து எடுக்கப்பட்டு வருகிறது. தேவையை அறிய வேண்டும் எனில், அவர்களை சந்திக்க வேண்டும். தொடர்ந்து உரையாட வேண்டும். விருப்பங்களையும் ரசனைகளையும் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

நிகழ்கால வாழ்க்கைமுறையில் இந்த அறிதல் என்பது தொழில்நுட்பம் சார்ந்தே அதிகம் இருக்கிறது. செல்போனில் என்னென்ன புதிய வசதிகள் அறிமுகமாகி இருக்கின்றன என்பதை சிறுவர்கள்கூட தெளிவாகச் சொல்வார்கள். பத்து மரங்களின் பெயர்களையோ, அவற்றின் பயன்களையோ கேட்டால் தெரியாது. பறவைகளைப் பற்றி, பருவநிலைகளைப் பற்றி கேட்டால் தெரியாது. ரயில் நிலையம், விமான நிலையம், பேருந்து நிலையம் போன்ற பயணிக்கிற இடங்களில்கூட சுற்றி என்ன நடைக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் அக்கறையின்றி, செல்போனில் மூழ்கிக் கிடக்கப் பழகிவிட்டோம். சூரிய உதயத்தின் ஒளி வெள்ளத்தையோ, அஸ்தமனத்தின் அழகையோ, நிலவையோ, நட்சத்திரங்களையோ அறியாமல் வாழ்வில் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பது நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வி.

இந்தக் கேள்விகளுக்கான பதிலை, அன்றாட வாழ்வின் நடைமுறையாக மாற்றுவோம். நம் உடலை அறிவோம், மனதை அறிவோம், சுற்றி இருக்கும் மனிதர்களை அறிவோம். இயற்கையை, பல்லுயிர்களை, செய்யும் வேலையின் நுட்பங்களை கவனித்து அறிவோம். அப்போதுதான் நிறைவாழ்வு நமக்குக் கிடைக்கும்.

குரு அருள்



The Culturepreneur

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



# சூழலின் மொழி அறிவோம்!

பலவித மரங்களில் வெவ்வேறு நிறங்களில் பூக்கும் மலர்கள், மாலை நேர அஸ்தமனச் சூரியன் மேற்கு வானத்தில் உருவாக்கும் வண்ணக்கோலங்கள், கூட்டம் கூட்டமாகப் பறக்கும் பறவைகள் எழுப்பும் வித்தியாசமான ஓசைகள்... இப்படி இயற்கை நம்மைச் சுற்றிய சூழலில் உருவாக்கி வைத்திருக்கும் காட்சிகளைவிடச் சிறந்த ஆசிரியராக யார் இருக்க முடியும்? நாம் விரும்பினால் கற்றுக்கொள்ள இந்தச் சூழலில் ஏராளமான பாடங்கள் கிடைக்கின்றன.

**மரம்:** 'மாறும் பருவங்களை எதிர்ப்புக் காட்டாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்பதை மரங்கள் கற்றுத் தருகின்றன. பச்சை இலைகள் பழுத்து இலையுதிர் காலத்தில் உதிர்வதை மரங்கள் எதிர்ப்பதில்லை. நம் உறுதி வேர்களில்தான் உள்ளது என்பதை உணர்ந்து, கிளைகளைப் பரப்பி இந்த உலகை வெற்றிகொள்ள நினைக்கிறது.

**கடல்:** எவ்வளவு பெரிதாகப் பரந்திருந்தாலும், ஒரு பெருங்கடல் என்பது துளித்துளி நீரால் நிறைந்ததுதான். 'நானே பெரியவன்' என்ற அகந்தையில் கடல் கொந்தளிப்பதில்லை. 'மனித சமூகம் என்னும் பெருங்கடலில், நாம் ஒரு துளி' என்ற தன்னடக்க உணர்வைக் கடல் தருகிறது.

**பறவை:** 'நம் அச்சத்தை உதறினால், நாம் வசப்படுத்த பரந்த வான்வெளி தயாராக உள்ளது' என்பதைப் பறவைகள் கற்றுத் தருகின்றன. முதல்முறை பறக்கத் தொடங்கும்போது மனதுக்குள் அச்சம் எழும். அதை உதறிவிட்டு ரிஸ்க் எடுக்கத் தயங்கக்கூடாது. 'மனம் விரும்பும் எதையும் அடைவதற்கு, உயரச் செல்ல வேண்டும். உயரத்துக்குச் செல்ல வேண்டுமானால், கால்களைத் தரையில் ஊன்றியிருப்பதே பாதுகாப்பு என்ற சொகுசான எண்ணத்தை உதற வேண்டும்' எனப் பறவைகள் பாடம் சொல்கின்றன.

**செல்லப்பிராணி:** அன்பை நாம் செல்லப்பிராணிகளிடம்தான் அதிகம் உணர்கிறோம். எதிர்பார்ப்பு இல்லாத, நிபந்தனையற்ற அன்பை அவை நம்மீது செலுத்துகின்றன. அன்பு என்பது வார்த்தைகளால் வெளிப்படுத்தும் உணர்வு அல்ல. அது இதயத்தால் உணரப்படுவது. 'கோபத்தையும் சுடுசொற்களையும் மனதில் வைத்துக்கொண்டு பழிவாங்காமல், அன்பை மட்டுமே நம் உணர்வாக வெளிப்படுத்த வேண்டும்' என்பதை அவை பாடமாக உணர்த்துகின்றன.

**எறும்பும் தேனீயும்:** மற்ற உயிரினங்கள் போல் இல்லாமல், எறும்புகளும் தேனீயும் சமூக வாழ்க்கை வாழ்கின்றன. தங்களின் பசி, தங்களின் தேவை என்று சுயநல எண்ணத்தோடு அவற்றின் செயல்கள் இருப்பதில்லை. தங்களின் கூட்டத்துக்காக அவை உழைக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்கும் எல்லா எறும்புகளின் பணியுமே அந்தக் கூட்டத்துக்கு முக்கியம்; எல்லாத் தேனீக்களின் உழைப்பும் ஒரு கூட்டத்துக்கு அவசியம்.



சுயநலமற்று, பொறுப்பை உணர்ந்து செயல்படுவதை இவற்றிடம் கற்றுக்கொள்ளலாம்.

**மூங்கிலும் தீக்கொன்றையும்:** தீக்கொன்றை மரம் மிக வேகமாக வளர்ந்து, கிளை பரப்பி அழகிய செந்நிற பூக்களைப் பூத்து வண்ணம் பரப்புகிறது. மூங்கில் மிக நிதானமாக முளைத்து வந்து, கிளைகள் இல்லாமல் நேராக வளர்கிறது. அதன் வாழ்வில் வண்ணங்கள் கிடையாது. தீக்கொன்றையைப் பார்த்து மூங்கில் பொறாமைப்படுவது இல்லை. மூங்கிலைப் பார்த்துத் தீக்கொன்றை பெருமூச்சு விடுவதில்லை. ‘அடுத்தவருடன் ஒப்பிட்டுப் பார்த்து நம்மைத் தாழ்த்திக்கொள்ளத் தேவையில்லை. ஒவ்வொருவரின் வாழ்க்கை இலக்கும் வெவ்வேறானவை’ என்பதை இவற்றிடம் பாடமாகப் படிக்கலாம்.

**பறவைக்கூட்டம்:** கூட்டமாகப் பறக்கும்போது எப்போதும் இரண்டு பறவைகள் மோதிக்கொள்வதில்லை. அவை தங்களுக்குள் பேசிக்கொள்வதில்லை. உண்மையான தகவல் பரிமாற்றத்துக்கு மொழியோ, வார்த்தைகளோ தேவையில்லை. அடுத்தவரின் உடல்மொழி, சக்தி, தேவை ஆகியவற்றைப் புரிந்துகொண்டு குழுவாக இயங்குவதன் அவசியத்தை இவை கற்றுத் தருகின்றன.





**வானம்:** இடியோ, மின்னலோ, புயலோ எது வந்தாலும் வானம் அதைப் பொருட்படுத்துவதில்லை. ‘இதுவும் கடந்து போகும்’ என்பதைப் புரிந்து வைத்திருக்கிறது வானம். நிர்மலமான நீலநிறமே தனது அடையாளம் என்பது அதற்குத் தெரியும். எதற்கும் சலனப்படாமல் இருப்பதை வானத்திடம் கற்கலாம்.

**நட்சத்திரம்:** இருள் சூழ்ந்த வானுக்கு அழகையும் வெளிச்சத்தையும் தருகின்றன நட்சத்திரங்கள். எங்கும் இருளே இருக்கிறது என அதற்குப் பழகியோ, பணிந்தோ விடாமல், தங்கள் இயல்பை வெளிப்படுத்துகின்றன நட்சத்திரங்கள். எந்தச் சூழலிலும் நம் இயல்பைத் தொலைக்காமல் இருப்பது எப்படி என அவற்றிடம் பாடம் பெறலாம்.

**காற்று:** இந்த உலகில் இருக்கும் எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் மட்டுமே அறிய முடியாது. அதையும் தாண்டி நாம் உணர்வுகளால் மட்டுமே அறிய முடிகிற விஷயங்களும் உண்டு என்பதற்கு ஆதாரம் காற்று. ஐம்புலன்களையும் திறப்பதோடு, அகக்கண்ணையும் திறந்து நம் சூழலை உணர வேண்டும் என சொல்லித் தருகிறது காற்று.

**விலங்குகள்:** புலிகளைப் போல வேட்டையாடிப் பசி தீர்க்கும் வாழ்க்கை நமக்கு அமையவில்லையே என மான்கள் கவலைப்படுவதில்லை. தங்கள் பலத்தையும் பலவீனத்தையும் அவை அறிந்துள்ளன. புலி வருமோ என்ற பயத்தில் அவை நிம்மதி தொலைப்பதில்லை. ஆபத்து வரும்போது தப்பிக்கப் பார்க்கின்றன. ஆபத்து விலகியதும், பழையபடி மேய்ச்சலுக்குப் போய்விடுகின்றன. எந்த ஆபத்தையும் அச்சமின்றி எதிர்கொள்ள விலங்குகள் கற்றுத்தருகின்றன.

**தோட்டம்:** நாளை பற்றிய நம்பிக்கையை நம் வீட்டுத் தோட்டம் நமக்குத் தருகிறது. ‘பிறகு முளைக்கும்’ என்ற நம்பிக்கையில்தான் விதையை ஊன்றுகிறோம். பழங்களும் காய்களும் தரும் என உரமும் ஊட்டமும் தருகிறோம். செடிகளும் மரங்களும் அவற்றின் இயல்பில்தான் வளர்கின்றன. நம் அவசரத்துக்கு அவை பலன் தருவதில்லை. உழைப்பைச் செலுத்தி, நம்பிக்கையோடும் பொறுமையோடும் காத்திருந்தால் பலன் கிடைக்கும்.

**மலைகள்:** மழையோ, வெள்ளமோ... எந்தச் சூழ்நிலையிலும் உறுதியாக நிற்கிறது மலை. வாழ்க்கையில் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டாலும், கலங்காமல் உறுதியாக எதிர்கொள்வதை மலைகளிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

**பூக்கள்:** எந்தச் சூழலில் மலர்ந்தாலும், தாங்கள் இருக்கும் இடத்தில் நறுமணம் பரப்பத் தவறுவதில்லை மலர்கள். எங்கு போகிறோம் என்பதை வைத்து அவை இயல்பை மாற்றிக்கொள்வதில்லை. இறைவனின் பூஜைக்குப் போனாலும், ஒரு பெண்ணின் தலைக்குப் போனாலும், இறுதி ஊர்வலத்துக்குப் போனாலும், எங்கும் ஒரே மாதிரி வாசனை தருகின்றன. உண்மையான அன்பையும் நன்றியையும் எல்லோரிடமும் ஒரே மாதிரி காட்ட வேண்டும் என்ற படிப்பினையைத் தருகின்றன மலர்கள்.

**வானிலை:** வெயில் காயும் என நினைக்கும் நேரத்தில் மழை பெய்யும். மழையை எதிர்பார்க்கும் நேரத்தில் ஏமாற்றிவிடும். ‘இது இப்படித்தான் நடக்கும்’ என முடிவு செய்து காத்திருக்காமல், எதிர்பாராத திருப்பங்களுக்குப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதை வானிலை கற்றுத் தருகிறது. ●



# அதுதான் மருந்து!

ஒரு பெண்மணி சின்னச்சின்ன விஷயங்களுக்குக்கூடக் கோபம் கொள்வார். கணவரிடம் சண்டைக்குப் போவார், மகனைத் திட்டுவார், மருமகளைக் குறை சொல்வார். அக்கம்பக்க வீட்டினருடன் இணக்கமான உறவும் இல்லை. தன் தவறு அந்தப் பெண்மணிக்குப் புரிந்தது. ஆனால், அவரால் தன்னை மாற்றிக்கொள்ள முடியவில்லை. ஒரு துறவியிடம் தன் பிரச்னையைச் சொன்னார். "நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் என் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனக்கு ஒரு தீர்வு சொல்லுங்கள்" என்று கேட்டார்.

துறவி உள்ளே சென்று ஒரு பாட்டிலில் மருந்து ஒன்றைக் கொண்டு வந்தார். "உங்களுக்குக் கோபம் வரும்போது இந்த மருந்தில் ஒரு மூடி அளவுக்கு வாயில் ஊற்றிக்கொள்ளுங்கள். ஐந்து நிமிடங்கள் அதை வாயிலேயே வைத்திருந்துவிட்டு, அதன்பிறகு விழுங்குங்கள். அப்போதுதான் மருந்து வேலை செய்யும்" என்றார்.

அந்தப் பெண்மணி அதேபோல் செய்தார். இரண்டே வாரங்களில் அவரிடமிருந்த கோபம் காணாமல் போய்விட்டது. திரும்பவும் துறவியை வந்து வணங்கிய அவர், "நீங்கள் கொடுத்தது அருமையான மருந்து. அது என் கோபத்தை இல்லாமல் ஆக்கிவிட்டது" என்றார்.

சிரித்த துறவி ஓர் உண்மையைச் சொன்னார். "உங்களுக்குக் கொடுத்தது வெறும் துளசித் தண்ணீர்தான். நீங்கள் மௌனமாக இருந்தீர்கள் அல்லவா? அதுதான் மருந்து. அதுவே உங்கள் கோபத்தைக் காணாமல் போகச் செய்தது. ஆத்திரம் எழும் சூழலில், நாம் தேவையற்ற வார்த்தைகளைப் பேசுகிறோம். அது சூழலை மோசமாக்குகிறது. அமைதியாக இருந்தால் பிரச்னைகள் தீர்ந்துவிடும்" என்றார் துறவி.

# சிறகுகள் முளைக்கும்!



தான் எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியைத் தராததால் சோர்ந்து போய்விட்டான் ஓர் இளைஞன். போராட்டமே வாழ்க்கையாகி, அந்தப் போராட்டங்களின் வீரியத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் ஒரு துறவியிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். கண்ணீருடன் தன் வாழ்க்கையை விவரித்தான். அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்ன துறவி, ஒரு கதையைக் கூறினார்.

"கிளி ஜோதிடர்களின் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் கிளியால் பறக்க முடியும். ஆனால், சீட்டை எடுக்க வெளியே வந்தாலும், அவை தம் சிறகை விரித்துப் பறக்க முயற்சி செய்வதில்லை. ஏன் தெரியுமா? சுதந்திரமாகப் பறந்து திரியும் கிளியைப் பிடித்துச் சீட்டு எடுக்கப் பழக்கும்போது, முதலில் அதன் சிறகுகளை வெட்டி விடுவார்கள். சிறகுகளை இழந்த கிளி, அதை உணராமல் பறக்க முயலும். ஆனால், அதனால் பறக்க இயலாது. மீண்டும் மீண்டும் பறக்க முயன்று, ஒவ்வொரு முறையும் தோற்றுப் போகும். தனக்கு இப்போது பறக்கும் சக்தி இல்லை என்று அது தவறாக நம்பும். பறப்பதையே மறந்து போய்விடும். வெட்டப்பட்ட சிறகுகள் நாளடைவில் வளர்ந்துவிடும். கிளியால் அப்போது பறக்க முடியும். ஆனால் அது பறக்க முயற்சி செய்யாது. ஏனெனில், அது தன்னால் முடியாது என்ற தவறான நம்பிக்கைதான்" என்றார் துறவி.

பிறகு அவர் தொடர்ந்தார். "எத்தனை முறை முயற்சி செய்கிறோம் என்பது முக்கியமல்ல. எத்தனை முறை தோல்வியடைகிறோம் என்பதும் முக்கியமல்ல. ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும், அடுத்த முறை ஜெயிப்போம் என நம்புவதும், அந்த நம்பிக்கையுடன் முயற்சியைத் தொடர்வதும்தான் முக்கியம்" என்றார் துறவி.

இளைஞன் புது உற்சாகத்துடன் எழுந்து போனான்.

# வாழ்த்துச்சொல் கேட்க வேண்டும்!


‘இது நடக்காது’, ‘இதைச் செய்ய முடியாது’ என்பது போன்ற எதிர்மறைச் சிந்தனைதான் அதிகம் நம்மை ஆக்கிரமிக்கிறது. பலரும் தெரிந்தோ, தெரியாமலோ பேசுகின்ற எதிர்மறைச் சொற்கள் வேதனையைத் தருகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள், உயர் அதிகாரிகள் என்று பலரும் இப்படிப் பேசுவதால் தங்களின் ஆற்றலைப் பலரால் வெளிப்படுத்த முடியவில்லை.

எண்ணங்கள் மற்றும் பேச்சுகளின் ஆற்றல் எப்படிப்பட்டது என்பதை அறிய உளவியலாளர்கள் ஒரு சோதனையைச் செய்தனர். செடிகளை வளர்க்க உதவும் பசுமைக் குடில்கள் இரண்டு, ஒரே மாதிரியாக உருவாக்கப்பட்டன. மண், உரம் போன்றவை ஒரே அளவில் இடப்பட்டன. உள்ளே சூழலும் சமமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு குடில்களிலும் ஒரே அளவில் விதைகள் ஊன்றப்பட்டன. ஒரு பசுமைக் குடிலுக்குள் ஒருவர் தினமும் சென்று, “இந்த விதைகள் முளைக்காது, முளைத்தாலும் நிலைத்து வளராது. சீக்கிரமே வீணாகிவிடும்” என்றெல்லாம் பேசிவந்தார். மற்றொரு பசுமைக்குடிலில் இன்னொருவர் போய், “இந்த விதைகள் எல்லாம் நன்றாக முளைக்கும், அற்புதமாக வளரும், அமோக பலனைத் தரும்” என்று புகழ்ந்து பேசி வந்தார். பல நாட்கள் இது தொடர்ந்தது.

வாழ்த்து வார்த்தைகள் பெற்ற குடிலில் ஊன்றப்பட்ட விதைகள் எல்லாமே முளைத்தன. கம்பீரமாக வளர்ந்து விளைச்சல் தந்தன. எதிர்மறையாகப் பேசப்பட்ட குடிலில் ஊன்றப்பட்ட விதைகளில் இரண்டு மட்டுமே முளைத்தன. அவையும் சீக்கிரமே வாடி வதங்கிவிட்டன.

விதைகளே இப்படியென்றால் மனிதர்களின் நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அதனால்தான் நாம் வாழ்த்துச்சொல் கேட்டு வளர வேண்டும்.



# வாழ்வு மாறும் சூழல்!

வாழ்க்கையில் சில சூழல்களில் நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள் நம் வாழ்வையே தலைகீழாக மாற்றிவிடும். அது மகிழ்ச்சியான சூழலாக இருந்தாலும், நெருக்கடியான சூழலாக இருந்தாலும், அந்தச் சூழல்களை நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதுதான் முக்கியம்.

பள்ளிப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைவது, முதல்முதலாகப் பட்டம் பெறுவது, முதல் வேலையில் சேரும் முதல் தினம், திருமணம் செய்துகொள்வது, புது வீடு வாங்குவது, தன் குழந்தையை முதன்முதலாகக் கையில் தூக்கி அந்தச் சிலிர்ப்பூட்டும் அனுபவத்தைப் பெறுவது, முதன்முதலாக வெளிநாடு செல்வது போன்றவையெல்லாம் மகிழ்வான சூழல்கள்.

ஏதோ ஒரு காரணத்தால் வேலையிலிருந்து விலக நேர்வது, மோசமான ஒரு நோயின் தாக்குதலுக்கு ஆளாவது, ஆபத்தான ஓர் அறுவை சிகிச்சையைக் கடந்து வருவது, நெருங்கிய உறவு ஒன்றின் இழப்பு போன்றவை நெருக்கடியான சூழல்கள்.

எந்தச் சூழலில் எப்படிப்பட்ட பாடங்களை நாம் பெறுகிறோம் என்பதே நம் வாழ்வை மேம்படுத்தும்.



# சூழலை அறிந்த நிர்வாகி!



ஒரு மேனேஜராக உலகிலேயே முதன்முதலில் அதிக சம்பளம் வாங்கியவர், சார்லஸ் ஷ்வாப். அமெரிக்காவைச் சேர்ந்த சார்லஸ் ஷ்வாப், இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆண்டுக்கு பத்து லட்சம் டாலர் சம்பளம் வாங்கியவர். ஆண்டுக்கு 2,000 டாலர் சம்பளம் வாங்குபவர்களே சொகுசு கார், பெரிய பங்களா என்று வாழ முடிந்த காலம் அது. அவர்களைவிட 500 மடங்கு அதிகமாகச் சம்பளம் வாங்கியபோது ஷ்வாப்புக்கு வயது வெறும் 38.

ஆண்ட்ரூ கார்னெகி என்ற தொழிலதிபர் தான் தொடங்கிய யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கம்பெனிக்கு ஷ்வாப்பை மேனேஜராக நியமித்து இந்தச் சம்பளத்தைக் கொடுத்தார். ஒரே ஆண்டில் அந்த நிறுவனத்தை லாபகரமாக மாற்றினார் ஷ்வாப். நஷ்டத்தில் இயங்கிய பெத்லஹேம் ஸ்டீல் கம்பெனியை அடுத்த சில ஆண்டுகளில் நிர்வாகம் செய்யப் போன ஷ்வாப், அதை அமெரிக்காவிலேயே அதிக லாபத்துடன் செயல்படும் நிறுவனமாக மாற்றினார்.

ஷ்வாப்புக்கு ஏன் அவ்வளவு சம்பளம் கொடுத்தார்கள்? அவரால் எப்படி எந்த நிறுவனத்தையும் வெற்றிகரமாக மாற்ற முடிந்தது? ஷ்வாப் அந்த நிறுவனங்களில் இருந்தவர்களிலேயே மிகவும் புத்திசாலியா என்றால் இல்லை. அவரைவிடப் புத்திசாலிகள் நிறைய பேர் இருந்தனர். ஸ்டீல் தயாரிப்பில் அவர் நிபுணரா என்றால் இல்லை. அவரைவிடத் தொழில்நுட்பம் அறிந்த நிறைய நிபுணர்கள் அந்த நிறுவனங்களில் இருந்தனர். பிறகு எதற்காக அவர் தலைமைப் பதவியை ஏற்றார்? வெற்றிகரமாக அதைச் செய்தார்?

தன் திறமை குறித்து அவரே சொன்ன ரகசியத்தை எல்லோரும் தங்கள் மனத்தில் பொன்னெழுத்துகளால் பதித்துக்கொள்வது நல்லது. எவரையும் வெற்றிகரமான மனிதராக மாற்றிவிடும் ரகசியம் அது.

'எந்தச் சூழலிலும் மனிதர்களிடம் ஆர்வத்தைத் தூண்டிவிடும் கலை எனக்குத் தெரிந்திருந்தது. எனது மிகப்பெரிய சொத்து அதுதான். மோசமான விமர்சனங்கள் எவர் ஒருவரையும் தன் லட்சியத்தை அடைய விடாமல் முடக்கிவிடும். வேலை செய்யும் ஆர்வத்தையே தடுத்துவிடும். அதே சமயத்தில், பாராட்டு வார்த்தைகள் எல்லோரையும் ஆர்வத்துடன் வேலை செய்ய வைக்கும். யார் நன்றாக வேலை பார்த்தாலும் நான் முழுமனதுடன் அவர்களைப் புகழ்வேன். அவர்களின் தவறுகளை மென்மையான வார்த்தைகளால் சுட்டிக் காட்டுவேன். அதனால் அவர்கள் அதன்பின் தவறு இல்லாமல் வேலை செய்வார்கள்' என்றார் ஷ்வாப். இதையே அவர் வாழ்நாள் முழுக்கக் கடைப்பிடித்து வெற்றியாளராகத் திகழ்ந்தார்.

நம்மில் பலரும் வாழ்வில் இதைத் தலைகீழாகச் செய்கிறோம். வேலை, தொழில், வியாபாரம் என்று ஏதோ ஒன்றைச் செய்யும் இடத்தில் பலரையும் விமர்சனங்களால் காயப்படுத்துகிறோம். வீட்டில் குழந்தைகளைச் சின்னச்சின்ன விஷயங்களுக்காகத் திட்டுகிறோம். குடும்பத்தினரை வார்த்தைகளால் குத்திக் கிழிக்கிறோம். இந்த விமர்சனங்கள் எல்லாமே சூழலை மோசமாக்கி, அவர்களின் ஆர்வத்தை ஆவியாக்கி விடுகின்றன.

எதிர்மறை வார்த்தைகளைப் பேசாமல், மனம் திறந்து பாராட்டுவோம். புகழ் வார்த்தைகள் எவரையும் உற்சாகமாக்கி, அவர்களின் மூளையில் டோபமைன் ஹார்மோனைச் சுரக்கச் செய்யும். அவர்கள் ஆர்வத்துடன் எதையும் செய்வார்கள். நாம் நினைக்கும் வெற்றி கைகூடும். ●



# சூழலை உணர்ந்தால் வெற்றி!

கல்லூரியில் எம்.பி.ஏ படித்து முடித்தான் ஓர் இளைஞன். கேம்பஸ் இன்டர்வியூவுக்கு வந்த நிறுவனத்தினர் பலரும், குறைந்த சம்பளத்தில்தான் அவனை வேலைக்கு எடுக்கத் தயாராக இருந்தார்கள். இன்டர்வியூவில் அவன் தன் தனித்திறமையை நிரூபிக்க முயன்றாலும் பலன் இல்லை. இந்தச் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்து உயர்வு பெறுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் என்ற கசப்பான உண்மை அவனுக்குப் புரிந்தது.

அவன் தந்தை நகரின் பிசியான பகுதி ஒன்றில் சாலையோர உணவகம் நடத்தி வந்தார். தள்ளுவண்டியில் ஸ்டவ் வைத்து இட்லி, தோசை மட்டும் சுட்டுப் பரிமாறும் வண்டிக்கடை அது. வெயில் அடங்கிய இரவு நேரத்தில் மட்டும் செயல்படும். வேலைக்குப் போவதைவிட இந்தக் கடையை நடத்தி அதிகம் சம்பாதிக்க முடியும் என்று அவன் நினைத்தான். தந்தையிடம் அதைச் சொன்னபோது அவர் அதிர்ச்சி அடைந்தார். "என்னை மாதிரி ரோட்டோரம் அடுப்பில் கிடந்து வேக வேண்டாம் என்றுதானே உன்னைப் படிக்க வைத்தேன். இப்படிச் சொல்கிறாயே?" என்று கோபப்பட்டார். "நீங்க என்னைப் படிக்க வச்சதை நினைச்சுப் பெருமைப்படற மாதிரி நான் கடையை நடத்தறேன்பா" என்று உறுதி கொடுத்தான் அவன்.

அடுத்த நாள் அவன் கடைக்குப் போனபோது சூழலைக் கவனித்தான். அதே பகுதியில் நிறைய தள்ளுவண்டிக் கடைகள் இருந்தன. 'எல்லோரும் ஒரே மாதிரி இட்லி, தோசைதான் விற்கிறார்கள். ஒருவர் என் கடையைத் தேடிவந்து ஏன் சாப்பிட வேண்டும்? அதற்கு என்னிடம் ஸ்பெஷலாக என்ன இருக்கிறது?' என்று யோசித்தான்.

வழக்கமான பொடி தோசை, மசாலா தோசையைத் தாண்டிச் சிறுதானியத் தோசைகளை அறிமுகம் செய்தான். இட்லியில் நிறைய வெரைட்டிகளைக் கொடுக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு சட்னிகளைப் பரிமாறினான். இவன் ஏதோ புதிதாகச் செய்கிறான் என்பதை உணர்ந்து வாடிக்கையாளர்கள் நிறைய பேர் வர ஆரம்பித்தனர். அவர்களிடம் கருத்துகளைக் கேட்டு ருசியை மேம்படுத்தினான்.

அப்பா போல மாலையில் மட்டும் கடை திறந்தால் முன்னேற முடியாது என்பதும் அவனுக்குப் புரிந்தது. ஒரு பெரிய குடியிருப்புப் பகுதியில் அவனது வண்டிக்கடை இருந்தது. காலையில் அவசரமாக வேலைக்குக் கிளம்புகிறவர்கள், கல்லூரி போகும் இளைஞர்கள், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர்கள் ஆகியோருக்குக் காலை உணவு தேவை இருக்கும் என்று நினைத்தான். அந்தப்பகுதியில் அப்படி காலை உணவு தரும் கடைகள் இல்லை. தன் வண்டிக்கடை இருக்கும் இடத்துக்கு அருகிலேயே ஒரு கடையை வாடகைக்கு எடுத்து உணவகம் திறந்தான்.


முதலில் பெரிதாக வரவேற்பு இல்லை. ஆனால், இப்படி ஒரு கடை காலையில் இருக்கிறது என்பது தெரிந்ததும், கொஞ்சம் கொஞ்சமாக வாடிக்கையாளர்கள் வர ஆரம்பித்தனர். ஐ.டி நிறுவனங்களில் இரவுநேரப் பணி முடித்து வருவோர், அவன் கடையில் சாப்பிட்டுவிட்டு அறைக்குப்போய்த் தூங்குவதை வழக்கமாக்கிக் கொண்டனர். அவனே எதிர்பார்க்காத அளவுக்கு பிசினஸ் வளர்ந்தது.

எந்தச் சூழலில் வர்த்தகம் செய்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, மற்றவர்கள் தராத எதைத் தருகிறோம், எந்த நேரத்தில் தருகிறோம், அதை எப்படித் தருகிறோம் என்று தெளிவாக உணர்ந்து செய்பவர்களுக்கு வெற்றி நிச்சயம். •



## வாய்ப்புகள் வரும்!

- வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது எறும்புகள் தண்ணீரில் அடித்து வரப்படும். அந்த எறும்புகளை மீன்கள் சாப்பிடும். குளத்தில் தண்ணீர் வற்றும்போது மீன்கள் வாழ முடியாது. அப்போது அவற்றை எறும்புகள் சாப்பிடும். இயற்கை ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கான வாய்ப்பை வழங்கும். அதற்கான காலம் வரும்வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.
- ஓர் அரங்கில் நாடகம் நடக்கும்போது முதல் வரிசையில் உட்கார்ந்து அதைப் பார்க்கவே எல்லோரும் ஆசைப்படுவார்கள். அதே அரங்கில் திரைப்படம் திரையிடப்பட்டால், கடைசி வரிசையில் உட்கார்ந்து பார்ப்பதையே வசதியாக நினைப்பார்கள். ஒருவர் எந்த இடத்தில் இருந்தாலும், அவருக்கான வாய்ப்புகள் நிச்சயம் வரும்.
- சோப்பை உருவாக்க எண்ணெய் தேவை. அந்த எண்ணெயால் ஏற்படும் கறையைப் போக்குவதற்கு ஒரு சோப்பு தேவை. வாழ்க்கையின் முரண் இதுதான். எந்தச் சூழலில் எப்படி செயல்படுவது என்பதைப் புரிந்துகொள்பவர்கள் ஜெயிப்பார்கள்.
- எல்லாப் பிரச்னைகளுக்கும் N+1 தீர்வுகள் உண்டு. இதில் N என்பது இதுவரை நீங்கள் முயற்சி செய்து பார்த்த வழிகள். அந்த +1 என்பதுதான் இதுவரை நீங்கள் யோசித்துப் பார்க்காத தீர்வு. அதை எப்போதும் தேடுங்கள்.
- பித்துப் பிடித்தவர்கள், குழந்தைகள் ஆகிய இருவரும்தான் வாழ்க்கையில் எப்போதும் சந்தோஷமாக இருப்பார்கள். உங்கள் இலக்கை அடைவதில் பித்துப் பிடித்தவர் போன்ற மனநிலையில் முயற்சி செய்யுங்கள். வெற்றி அடைந்ததும் அதை ஒரு குழந்தை போலக் கொண்டாடுங்கள்.



## சூழலைப் பாருங்கள்!

நான்கு எறும்புகள் ஊர்ந்து செல்லும்போது யானை ஒன்று குறுக்கே வந்தது. "இவனைக் கொன்று விடலாம்" என்றது முதல் எறும்பு. "இல்லை, இவன் கால்களை மட்டும் முறித்து விடலாம்" என்றது இரண்டாம் எறும்பு. "அது போதாது, அப்படியே தூக்கி வீசி விடலாம்" என்றது மூன்றாம் எறும்பு.

நான்காம் எறும்போ, "நான்கு பேர் சேர்ந்து ஒருவனைத் தாக்குவது நம் வீரத்துக்கும் யுத்த தர்மத்துக்கும் அழகில்லை. அவனை மன்னித்துவிட்டு ஓரமாய் வாருங்கள்" என்றது. இந்த எதுவுமே அறியாமல் யானை தன் பாதையில் போய்க்கொண்டிருந்தது.

'நாம் நினைப்பதுதான் சரி' என்ற அகங்காரம் வந்து விட்டால், இந்த எறும்புகளைப் போல யானைகளைக்கூடத் துச்சமாகப் பார்க்கத் தோன்றும். சூழலை உண்மையாகப் பாருங்கள்.



## நேர்க்கோடு!

6 வயதுக் குழந்தையாக இருந்தபோது தன் மகனை ஒரு தாய் திட்டினார், அடித்தார். "நேராக ஒரு கோடு வரையக்கூடத் தெரியவில்லையே! நீ எதைத்தான் ஒழுங்காகக் கற்றுக்கொள்ளப் போகிறாயோ?" என்றார். அந்தக் குழந்தை வளர்ந்து 25 வயதை எட்டியபோது ஒரு விபத்து. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். அவன் இதயத்துடிப்பை ஒரு ஒளிர்திரை, மேலேயும் கீழேயும் ஏறி இறங்கும் கோடுகளாகக் காட்டிக்கொண்டிருந்தது. 'இதயம் துடிக்கட்டும். அது தடுமாறி நேர்க்கோடு மட்டும் வந்துவிடக்கூடாது' என்று அந்தத் தாய் வேண்டிக்கொண்டே ஒளிர்திரையைப் பார்த்தார்.



## இயல்பு மாறாதீர்கள்!

அறிவியலுடன் சேர்த்து அறத்தையும் போதித்து வாழ்க்கைப்பாடம் நடத்தினார் ஓர் ஆசிரியர். குறும்புக்கார மாணவன் ஒருவன் எழுந்து அவரிடம் அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டான்.

"தினமும் பசும்பால் அருந்தினால் உடல் வலிமையாகும் என்று சொல்கிறீர்கள். அப்படிப் பார்த்தால் வலிமையான உயிரினமாகப் பூனைதானே இருக்க வேண்டும். பூனை ஏன் வலிமை பெறவில்லை?

தினமும் நீண்ட தூரம் நடந்தால் உடல் எடை குறைந்து ஆரோக்கியமாக இருப்போம் என்கீறீர்கள். ஆனால், நாள் முழுக்க நடந்துகொண்டே இருக்கும் யானை ஏன் எடை குறையாமல் குண்டாக இருக்கிறது?

தினமும் ஒரு மணி நேரமாவது நீச்சலடித்தால் உடல் மெலிந்து ஆரோக்கியமாக இருப்போம் என்கிறீர்கள். அப்படியென்றால் 24 மணி நேரமும் நீந்திக்கொண்டே இருக்கும் திமிங்கிலம் ஏன் ஒல்லியாக ஆகவில்லை?

கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைச் சாப்பிட்டால், உடலில் கொழுப்பு அதிகமாகி அவதிப்படுவோம் என்கிறீர்கள். அப்படியென்றால் புல்லை மட்டுமே சாப்பிடும் ஆட்டின் உடம்புக்குள் அவ்வளவு கொழுப்பு எங்கிருந்து வந்தது?"

இந்தக் கேள்விகளைக் கேட்டு ஆசிரியர் சிரித்தார். "ஒவ்வொருவருக்கும் இயல்பு என ஒன்றை இயற்கை உருவாக்கி வைத்திருக்கிறது. அதை அந்தந்த விலங்குகள் பின்பற்றுகின்றன. தங்களின் தேவைக்கு ஏற்றபடி அவை மாறி வாழ்கின்றன. உங்கள் இயல்பு எதுவோ, அதைப் பின்பற்றுங்கள். அதுதான் உங்களை உயர்த்தும்" என்றார்.

## மாற்றிப் பார்க்காதீர்கள்!

- "ஒரு நதி ஓடும் திசையிலேயே எல்லோரும் நீந்திப் போவார்கள். அது சுலபமான விஷயம். எதிர்நீச்சல் போடுகிறவரைத்தான் உலகம் மதிக்கும். அப்படிப் போராடிப் பெறுவதுதான் வெற்றி" என்று தத்துவம் பேசினார் ஒருவர். "வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடலாம். ஆனால், ஒருவழிப் பாதையில் எதிர்திசையில் வாகனம் ஓட்டி வருவது தவறு" என்று சொல்லி அவருக்கு அபராதம் விதித்தார் போக்குவரத்துக் காவலர்.
- ஒருவர் மோசமான செலவாளியாக இருந்தார். சம்பளம் வாங்கிய அந்த நாளிலேயே எல்லாப் பணத்தையும் செலவழித்துவிடுவார். பணம் ஒருநாள் அவரிடம் எரிச்சலுடன் சொன்னது, "நான் உனக்குச் சொந்தமில்லாத பொருள் என்பது போல நினைத்துக்கொண்டு உடனே உடனே செலவழிக்கிறாய். இது தப்பு! இன்று நீ என்னைப் பாதுகாத்தால், நாளை நான் உன்னைப் பாதுகாப்பேன்!"
- உடல் பருமனால் அவதிப்பட்ட ஒருவர் மருத்துவரிடம் போனார். "என் உடல் எடைக்கு நான் 7 அடி உயரம் இருக்க வேண்டும். உயரம் குறைவாகப் பிறந்தது என் தவறா?" என்று கேட்டார். டாக்டர் ஒரு நிமிடம் திகைத்தார். பிறகு சொன்னார், "சில விஷயங்களை வேறு கோணங்களில் மாற்றிப் பார்ப்பது நல்லதுதான். ஆனால், இதை அப்படிப் பார்க்காதீர்கள். உங்கள் உயரத்தை நீங்கள் நினைத்தாலும் மாற்ற முடியாது. ஆனால், எடையைக் குறைக்க முடியும். அதைச் செய்யுங்கள்!"



# குடும்ப உறவின் சூழல் அறிவோம்!





தன் மனைவியை விவாகரத்து செய்வதற்காக வழக்குப் போட்டிருந்தார் மோகன். அதற்காகக் குடும்பநல நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். இந்த வழக்கு நீண்ட காலமாக இழுபறியாக இருப்பதால் அவருக்குக் கோபம் எழுந்தது. அந்தக் கோபத்துடன் தன் வழக்கறிஞரைச் சந்திக்கப் போனார்.

“என்ன சார் இது? நாம கேஸ் போட்டு ஒரு வருஷம் முடியப் போகுது. நானும் கேஸ் விசாரணைக்காகப் பல நாட்கள் லீவ் போட்டுட்டு வந்து போறேன். என் எல்லா லீவும் இப்படியே தீர்ந்து போயிடுச்சு. ஆனா, இன்னும் எந்த முடிவும் கிடைக்கலை. இன்னும் எத்தனை நாள் ஆகும்? எப்போ எனக்கு இந்த மன உளைச்சல்ல இருந்து விடுதலை கிடைக்கும்?” என்று கோபமாக மோகன் கேட்டார்.

“அவசரப்படாதீங்க மோகன்” என்று அவரை அடக்கினார் வழக்கறிஞர். “நீங்க நினைக்கிற மாதிரி அவ்வளவு சாதாரணமா விவாகரத்து வாங்கிட முடியாது. நினைச்சதும் வாங்கிடறதுக்கு, இது என்ன ஏதாவது பணம் கடன் வாங்கற மாதிரி விஷயமா என்ன? உறவையே முறிச்சுக்கற விஷயம். ரெண்டு பேரும் இனிமே சேர்ந்து வாழறதுக்கு வழியே இல்லைன்னு நீதிபதிக்கு நம்பிக்கை வரணும். அதுக்கு ஸ்ட்ராங்கா ஆதாரங்கள் தேவைப்படும்” என்ற வழக்கறிஞர், கொஞ்ச நேரம் யோசித்தார்.

பிறகு, “நான் சொல்ற மாதிரி செய்யறீங்களா? உங்களுக்குச் சீக்கிரமே விவாகரத்துக் கிடைச்சிடும்” என்றார். மோகன் ஆவலுடன், “என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்.

“உங்க மனைவி காயத்ரிக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டுங்கள். அந்தச் சந்தேகம்தான் நீங்கள் விவாகரத்துக் கேட்பதற்கு முக்கியமான காரணம் என்று நீதிமன்றத்தில் சொல்லுங்கள். நீங்கள் கொஞ்சம் சொன்னால் போதும், மீதியை நான் வாதாடும்போது சேர்த்துக்கொள்கிறேன். அதற்கு ஆதாரங்கள் இருப்பது போலச் சில சம்பவங்களை ஜோடித்துக்கொள்ளலாம். இதை மட்டும் செய்துவிட்டால் போதும், உடனே வழக்கு முடிந்துவிடும்” என்றார் வழக்கறிஞர்.

மோகனுக்கு இப்போது இன்னும் கோபம் ஏற்பட்டது. “அதாவது என் மனைவி நடத்தை சரியில்லைன்னு நான் வந்து பொய் சொல்லணும்? அப்போதான் எனக்கு டைவர்ஸ் கிடைக்குமா? இப்படிக் கேவலமா என் மனைவியை அசிங்கப்படுத்தச் சொல்றீங்களே சார்? காயத்ரிக்கும் எனக்கும் பிரச்னைகள் இருக்கறது நிஜம்தான். அவங்க செய்யற சில விஷயங்கள் எனக்குப் பிடிக்கலை, உண்மைதான்! அதுக்காக இப்படி அபாண்டமா சொல்லணுமா? அவங்க அப்படிப்பட்டவங்க கிடையாது” என்றார் மோகன்.





**குடும்ப உறவின் சூழல்களை அறிந்து சில விதிகளைப் பின்பற்றினால் மகிழ்ச்சி நிரந்தரமாகும். அவை:**

''நான் மட்டும் என்ன அது உண்மைன்னா சொல்றேன். உங்களுக்குச் சீக்கிரம் டைவர்ஸ் கிடைக்கணும்னா இப்படி ஏதாவது சொல்லித்தான் ஆகணும். சின்னச்சின்னக் குடும்பப் பிரச்னைகளைக் காரணம் சொல்லி விவாகரத்து வாங்க முடியாது.''

"எனக்கு டைவர்ஸ் வேணும்ங்கறதுக்காக என் மனைவியோட கேரக்டரை அசிங்கப்படுத்த முடியாது. இதை நினைச்சாலே எனக்கு உடம்பு கூசுது. அப்படியெல்லாம் பேசினா நான் மனுஷனே கிடையாது. அப்புறம் எந்த முகத்தை வைத்துக்கொண்டு நான் எல்லோரையும் எதிர்கொள்வேன்?"

''மோகன், கோபப்படாதீங்க! நமக்கு வேலை சீக்கிரம் முடியணும்னா இப்படி ஏதாவது செய்தாகணும். எந்த முயற்சியும் செய்யாம எதுவும் கிடைச்சிடாது.''

"விவாகரத்து வாங்கறதுக்கு நான் இவ்வளவு முயற்சி பண்றதுக்குப் பதிலா, என் திருமண வாழ்க்கையைக் காப்பாத்தறதுக்கு முயற்சி பண்ணியிருக்கலாம். எனக்கு விவாகரத்தே வேண்டாம் சார், வழக்கை வாபஸ் வாங்கிடுங்க" என்று கோபமாகச் சொல்லிவிட்டு எழுந்து வெளியில் போனார் மோகன். அங்கே அவர் மனைவி காயத்ரி நின்றிருந்தார். பக்கத்திலேயே அவரது வழக்கறிஞர். இவ்வளவு நேரம் மோகன் பேசுவதை அவர் கேட்டிருக்கிறார்.

கண்ணீருடன் மோகனின் கரங்களைப் பற்றிக்கொண்ட காயத்ரி, "நானும் உங்களை மாதிரி நம்ம திருமண வாழ்க்கையைக் காப்பாத்த விரும்பறேன். நாம மறுபடியும் சேர்ந்து வாழணும்" என்றார்.

''மோகன், நானும் உங்க மனைவியின் வழக்கறிஞரும் நண்பர்கள். எங்களுக்கு யாரையும் பிரிச்சு வைக்கறதுல விருப்பம் இல்லை. உங்களைப் பற்றி உங்க மனைவிகிட்ட தெரிஞ்சுக்கிட்டுதான் இப்படி ஒரு நாடகம் நடத்தினோம்" என்று சொல்லிச் சிரித்தார் அவரது வழக்கறிஞர். மோகன் அவருக்கு நன்றி சொன்னார்.

● ஒருவர் கோபத்தில் வெடிக்கும்போது இன்னொருவர் அமைதி காக்க வேண்டும். இருவரும் கோபத்தில் கத்தினால், உறவு கண்ணாடி போல நொறுங்கிவிடும். அவர் கோபப்படுவதற்கான காரணத்தை அறிந்து அதைச் சரிசெய்ய முயல வேண்டும். கோபம் தீர்ந்ததும் அவரே தன் தவறைப் புரிந்துகொண்டு வருந்துவார். கோபம் ஏற்படுவதற்கான சூழலை இருவருமே முயன்று குறைத்துக்கொள்வது நல்லது.

● எந்தச் சண்டையையும் நீண்ட நேரம் நீடிக்க விடக்கூடாது. ஏதோ ஒரு கட்டத்தில் சண்டையை நிறுத்திவிட்டு இருவரும் உட்கார்ந்து பேச வேண்டும். பரஸ்பரம் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

● வாழ்க்கைத்துணையிடம் எந்த விஷயத்தையும் சொல்லாமல் ஒளித்து வைக்கக்கூடாது. அந்த ரகசியங்கள் வேறு யாரோ நண்பர்கள் வழியாகத் தெரியவந்தால், தேவையற்ற விரிசல்கள் ஏற்படும். உங்கள் விருப்பு வெறுப்புகள், கவலைகள், மகிழ்ச்சிகள், பலவீனங்கள் என்று எல்லாவற்றையும் ஒளிவுமறைவு இல்லாமல் சொல்லிவிடுங்கள்.

● எவ்வளவுதான் நெருக்கமான தம்பதியாக இருந்தாலும், ஒவ்வொருவருக்கும் அந்தரங்கம் என ஒன்று இருக்கிறது. அதை வாழ்க்கைத்துணை மதிக்க வேண்டும். 'நான் கொஞ்ச நேரம் தனியா இருக்கணும்' என்று சொன்னால், அமைதியாக அவரைத் தனிமையில் விடுங்கள். இதனால் அன்பு குறைந்துவிடாது.

● இருவருக்கும் பிடித்தமான விஷயங்களை இணைந்து செய்யுங்கள். பிடித்த சினிமாவைச் சேர்ந்து பார்ப்பது, ஞாயிற்றுக்கிழமையில் இணைந்து வீடு சுத்தம் செய்வது, ஏதோ ஒரு விளையாட்டில் ஈடுபடுவது என்று இணைந்து நேரம் செலவிடுங்கள்.

● உங்களுக்காக நேரம் செலவிட்டு உங்கள் வாழ்க்கைத்துணை ஏதோ ஒன்றைச் செய்யும்போது அதற்குப் பெரும் மதிப்புக் கொடுங்கள். அவரைப் பாராட்டி நன்றி சொல்லுங்கள்.

● உங்கள் வாழ்க்கைத்துணையே உங்களின் பலம், அவரே உங்கள் பலவீனமும்கூட! கண்மூடித்தனமாக அவர் உங்களிடம் அன்பு காட்டினால், நீங்களும் அப்படியே அன்பு செய்யுங்கள். அன்பில் குறை வைக்காதீர்கள். குழந்தைத்தனமாகப் பரஸ்பரம் அன்பு செலுத்தும் தம்பதிகள், மகிழ்ச்சி குறையாமல் வாழ்கிறார்கள். ●

# சூழலை அறிந்து கேள்விகள் கேளுங்கள்!

திருமண விழா ஒன்றில் இரண்டு பேர் புதிதாக அறிமுகம் ஆனார்கள். ஒருவர், "என் பெயர் சேகர்" என்று சொல்லிக் கைகுலுக்க, ''உண்மையாகவா?'' என்று கேட்டார் இரண்டாமவர். பெயரைப் போய் ஒருவர் பொய்யாகச் சொல்ல முடியுமா? சேகர் குழப்பமாகப் பார்க்க, ''மன்னிச்சிடுங்க சார்! இப்போதெல்லாம் எதைக் கேள்விப்பட்டாலும், அது உண்மையா, பொய்யா என்ற குழப்பம் வந்துடுது. அதனால் எதையுமே இப்படிக் கேட்கறது வழக்கம். பழக்கதோஷத்துல உங்களிடமும் அப்படிக் கேட்டுட்டேன்" என்றார் இரண்டாமவர்.

தினம் தினம் புதுப்புதுத் தகவல்கள் வந்து கொட்டும் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பிரச்னை என்னவென்றால், இவற்றில் எது சரி, எது தவறு என்பதைப் புரிந்துகொள்ள முடியாது.

'கோதுமை உணவுகளைச் சாப்பிடுவது சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லது' என ஒரு தகவல் பரவினால், சில நாட்களில் 'கோதுமையே ஆபத்தானது' என இன்னொரு தகவல் பரவுகிறது. 'வெள்ளையாக இருக்கும் எதையும் சாப்பிடாதீர்கள்' எனச் சிலர் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால், 'பால் சாப்பிடாமல் உங்களுக்குக் கால்சியம் எங்கிருந்து கிடைக்கும்?' என வேறு சிலர் எதிர்க்கேள்வி எழுப்புகிறார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் எத்தனையோ விவாதங்கள் நடக்கின்றன.

எந்தச் சூழலிலும் எல்லாவற்றையும் அலசி உண்மையைக் கண்டுபிடிக்கச் சில கேள்விகள் கேட்பது அவசியம்.

## முதல் கேள்வி... 'யார்?'

ஒரு செய்தி பரவுகிறது என்றால், இதன்மூலம் பலனடையப் போவது யார்? இது யாருக்கு ஆபத்தானது? இதுபற்றிய முடிவுகளை யார் எடுக்கிறார்கள்? இது யாரை நேரடியாகப் பாதிக்கிறது? இதைப்பற்றிய உண்மையைக் கேட்டுத் தெரிந்துகொள்ள யார் சரியான நபர்? இந்தச் செய்தி அல்லது உண்மையை முதலில் சொன்னவர் யார்? இத்தனை 'யார்'களுக்கும் நம் சிந்தனையால் விடை தேட வேண்டும்.

## இரண்டாவது கேள்வி... 'என்ன?'

ஒரு தகவல் கிடைக்கிறது என்றால், அதைப் பற்றிய வேறொரு கோணம் என்ன? அது சொல்ல வரும் கருத்து என்ன? அதற்கு எதிரான கருத்து என்ன? அதன் நல்ல விளைவு என்ன? மிக மோசமான விளைவு என்ன? அது ஆபத்தானது என்றால், அந்த ஆபத்தைத் தவிர்க்க நாம்



செய்யவேண்டியது என்ன? இந்தச் சூழலில் நாம் செய்யவேண்டிய மாற்றம் என்ன? நாம் இதைச் செய்வதால் ஏற்படும் விளைவுகள் என்ன? இப்படி வரிசை கட்டும் கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொள்ள வேண்டும்.

## மூன்றாவது கேள்வி... 'எங்கே?'

நாம் கேள்விப்படும் ஒரு விஷயம் கற்பனையானதாக இருக்கலாம்; அல்லது நாம் இதுவரை கேள்விப்படாததாக இருக்கலாம். அப்படிப்பட்ட சூழலில் சில கேள்விகள் எழ வேண்டும். நிஜ உலகில் நாம் இதை எங்கே பார்க்க முடியும்? இதேபோன்ற கருத்துகளோ, இதேபோன்ற சூழலோ எங்கே உள்ளது? எங்கே இதற்கு மிக அவசியமான தேவை இருக்கிறது? எங்கே இது மிகப் பெரிய பிரச்னையாக ஆகும்? இதுதொடர்பான கூடுதல் தகவல்கள் எங்கே கிடைக்கும்? இதைச் செயல்படுத்தினால், இந்த யோசனை நம்மை எங்கே அழைத்துச் செல்லும்? இதை மேம்படுத்தும் திட்டங்களை எங்கே நாம் பெற முடியும்? இதையெல்லாம் நாம் அறிய வேண்டும்.

## நான்காவது கேள்வி... எப்போது?

ஒரு திட்டம் அல்லது யோசனை பற்றிய அறிவிப்பு வெளிவருகிறது. உடனடியாக நம் மனதில் எழ வேண்டிய கேள்வி, 'எப்போது?' இது எப்போது ஏற்றுக்கொள்ளப்படும்? எப்போது ஏற்கப்படாமல் போகும்? எப்போது இது சமுதாயத்துக்குப் பலன் தரும்? எப்போது இது பெரிய பிரச்னையாக மாறும்? இதைச் செயல்படுத்த சிறப்பான நேரம் எப்போது? இதில் வெற்றிபெற்றுவிட்டோம் என எப்போது தெரியும்? ஏற்கனவே இதுபோல எப்போதாவது நிகழ்ந்துள்ளதா? எப்போது இதுதொடர்பாக நாம் மற்றவர்களிடம் உதவிகள் கேட்கலாம்? இப்படி வரிசையாக எழும் கேள்விகள்தான் நம்மை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லும்.

## ஐந்தாவது கேள்வி... ஏன்?

எந்தத் தகவலையும் அலசும்போது 'ஏன்?' என்ற கேள்வி நமக்குள் எழ வேண்டும். ஏன் இது ஒரு பிரச்னையாக இருக்கிறது? ஏன் இது நமக்குச் சவாலாக இருக்கிறது? ஏன் இது என்னோடு சம்பந்தப்படுகிறது? ஏன் இது சிறந்த சூழலாக உள்ளது? ஏன் இப்படி ஒரு மோசமான சூழல் உருவானது? ஏன் மக்கள் இதனால் ஈர்க்கப்படுகிறார்கள்? அல்லது, ஏன் மக்கள் இதை வெறுக்கிறார்கள்? ஏன் இதுபற்றி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்? ஏன் இது இத்தனை நாட்களாக விவாதிக்கப்படும் சர்ச்சையாக உள்ளது? இன்றைக்கு இது ஏன் தேவை? இத்தனை 'ஏன்'களுக்கும் நமக்கு விடை தெரிய வேண்டும்.

## ஆறாவது கேள்வி... எப்படி?

எந்த ஒரு விஷயமும் நமக்குள் எழுப்பும் 'எப்படி?' என்ற கேள்வி, அதன் பின்னணியில் இருக்கும் உண்மைகளை வெளிச்சம் போட்டுக்காட்டும். இதன் பின்னால் இருக்கும் எல்லா உண்மைகளையும் நாம் எப்படி அறிந்துகொள்வது? இதை நாம் பாதுகாப்பாக எப்படி அணுகுவது? நமக்கும் மற்றவர்களுக்கும் இது எப்படிப் பலன் தரும்? இது நமக்கோ, மற்றவர்களுக்கோ என்ன பாதிப்புகளை ஏற்படுத்தும்? எதிர்காலத்தில் நாம் இதை எப்படிப் பார்ப்போம்? நம் நலனுக்காக இதை எப்படி மாற்றிக்கொள்வது?

நாம் நாகரிகமும் தொழில்நுட்ப முன்னேற்றமும் அடைந்தது கேள்விகளால்தான். இப்போது நாம் குழப்பங்களிலிருந்து தெளிவுபெற வழிகாட்டுவதும் கேள்விகள்தான். எந்தச் சூழலிலும் கேள்விகளே உங்களை உண்மையை நோக்கி அழைத்துச் செல்லும். ●

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

வெண்மை
VENMAII
தமிழ் மாத இதழ்
மலர் 9 இதழ் 11
மே 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்
கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்
த.செ.ஞானவேல்

இதழாசிரியர்
வள்ளி

வடிவமைப்பு
K. உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
A2, தரை தளம்,
எண்.110, டிரினிடி காம்ப்ளக்ஸ்,
நான்காவது அவென்யூ,
அசோக் நகர், சென்னை - 600 083.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# மதிப்பு தருவது எது?

நதியில் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்தது ஒரு மீன். ஒரு நாள் அது கரையோரமாக நீந்திக்கொண்டிருக்கும்போது, "மீன் நண்பனே, தண்ணீர் எப்படி இருக்கிறது?" என்று குரல் கேட்டது. மீன் தலையை உயர்த்திப் பார்த்தது. கரையோர மரத்தில் அமர்ந்திருந்த குரங்குதான் கேள்வி கேட்டது என்பதை உணர்ந்தது. "தண்ணீர் இதமாகவும் வெதுவெதுப்பாகவும் இருக்கிறது. அதனால் உற்சாகமாக நீந்திக்கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னது மீன்.

குரங்கிற்கு இதைக் கேட்டதும் பொறாமை ஏற்பட்டது. எப்படியாவது மீனை மட்டம் தட்ட நினைத்தது. "நதியின் தண்ணீர் எப்படி இருக்கிறது என்று அதற்குள்ளே இருந்தபடி பார்த்தால் தெரியுமா? தண்ணீரிலிருந்து வெளியே வா! இந்த மரத்தில் ஏறி நின்று பார். தண்ணீர் எவ்வளவு அழகு என்று ரசிக்கலாம்" என்றது குரங்கு.

"தண்ணீரை விட்டு வெளியில் வந்தால் என்னால் வாழ முடியாதே! எனக்கு மரம் ஏறவும் தெரியாதே" என்று சோகமாகச் சொன்னது மீன்.

மீன் சோகமானதைப் பார்த்துவிட்டுக் குரங்கிற்கு உற்சாகம் ஏற்பட்டது. "என்னது? உனக்கு மரம் ஏறத் தெரியாதா? மரம் ஏறத் தெரியாத வாழ்க்கை எல்லாம் வாழ்க்கையா?" என்று கேட்டுவிட்டு மரத்தின் கிளைகளில் தாவித் தாவி ஏறி, தன் மரமேறும் திறமையைக் காட்டியது.

அந்த நிமிடத்திலிருந்து மீனுக்கு உற்சாகம் பறிபோனது. 'குரங்கு சொல்வதுதான் சரி. எனக்கு மரம்கூட ஏறத் தெரியவில்லை. நான் வாழும் வாழ்க்கை மதிப்பு இல்லாதது' என்று நினைத்தது. அந்த மீன் அதன்பின் சோகமாகவே இருந்தது. தன் கூட்டத்துடன் கலந்து பழகவே இல்லை.

இதை இன்னொரு மீன் கவனித்தது. "ஏன் நீ சோகமாக இருக்கிறாய்?" என்று கேட்டது. குரங்கு தன்னைக் கிண்டல் செய்ததை இந்த மீன் சொன்னது. அதைக் கேட்டதும் அந்த இன்னொரு மீன் சிரித்தது.

"அந்தக் குரங்கு சொன்னதில் எந்த அர்த்தமும் இல்லை. நாம் தண்ணீரில் வசிக்கிறோம். தண்ணீரை விட்டு வெளியில் போனால் நமக்கு வாழ்க்கை இல்லை என்பதெல்லாம் சரிதான். ஆனால், இந்தத் தண்ணீரில் வாழ்வதற்குத் தேவையான நீச்சல் திறமை நமக்கு இருக்கிறது. தண்ணீருக்கு அடியில் பாதுகாப்பாக நம்மால் பதுங்கிக்கொள்ள முடியும். இதெல்லாம் நம் பலங்கள். குரங்கு மரத்தில் வசிக்கிறது. அதனால் அதற்கு மரம் ஏறத் தெரிந்திருக்க வேண்டும். நமக்கு ஏன் அது தேவை? ஒரு குரங்கால் தண்ணீரில் நீந்தவும் முடியாது. தண்ணீருக்கு அடியில் வந்தால் அது மூழ்கிச் செத்துப் போய்விடும். நீச்சல் தெரியாததால் அதன் வாழ்க்கைக்கு மதிப்பு இல்லை என்று சொல்லிவிட முடியுமா? உன் பலத்தை நினைத்துப் பெருமைப்படு! பலவீனம் என்று அடுத்தவர்கள் சொல்வதைப் பொருட்படுத்தாதே" என்றது.

மீனுக்கு உண்மை புரிந்து மீண்டும் உற்சாகமானது. பெரும்பாலான மனிதர்கள் தங்களையே அளவுகோலாக வைத்து அடுத்தவர்களை மதிப்பிடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்திறமை இருக்கும். நம் தனித்திறமை அடுத்தவர்களுக்குத் தெரியாது. அதைப் புரிந்துகொண்டு விமர்சனங்களுக்கு மதிப்புக் கொடுப்பது நல்லது. ●


The Brand Trust Report - India Study 2021
Power of Trust
India's Most Trusted
Dhotis Brands
RAMRAJ ©
LITTLE STARS ®
KIDS DHOTIS • SHIRTS • KURTA
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in


Culture India™
TRADITIONAL KURTA • DHOTIS
BY
RAMRAJ©
Rooted in Culture. Defined by Style.
Experience the seamless blend of heritage and contemporary style with Ramraj's Kurta and Dhoti/Pyjama collection.
The Brand Trust Report - India Study 2021
Power of Trust
India's Most Trusted Dhotis Brands
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in



Pride in
Every
Thread.
Experience the timeless elegance of Ramraj White Shirts & Dhotis, where tradition meets effortless style. Woven from the finest fabrics for unmatched comfort reflecting the pride of heritage with a modern flair. Wear it with confidence. Wear it with pride.
RAMRAJ
COTTON
DHOTIS • SHIRTS
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in


RAMRAJ
lagnaa
PURE SILK DHOTIS ● SHIRTS
SCAN QR CODE
FOR STORE LOCATION
The Brand Trust Report - india Study 2021
Power of Trust
India's Most Trusted
Dhotis Brands
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# சூழலை அறிந்து செயல்படுங்கள்!

மாமன்னர் அக்பரின் அரசவையில் இருந்த புத்திசாலி அமைச்சர் பீர்பால் பற்றி ஏராளமான கதைகள் உண்டு. கருணையுடனும் வித்தியாசமாகவும் சூழலை அணுகிப் பலருக்கு உதவிகள் செய்த வல்லமை அந்தக் கதைகளில் வெளிப்படும். அப்படி மூன்று கதைகள் இங்கே...

பீர்பாலுக்கு மன்னர் அக்பர் மிகுந்த மதிப்புக் கொடுப்பதால், பலரும் அவரைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள். மூத்த அமைச்சர் ஒருவருக்கு பீர்பால் மீது வெறுப்பு எழுந்தது. அந்த அமைச்சர் தன் மகனை அரண்மனை பொக்கிஷ அதிகாரியாக ஆக்குவதற்கு ஆசைப்பட்டார். அதற்கு பீர்பால் தடையாக இருப்பதாகச் சந்தேகப்பட்டார். எனவே, பீர்பாலைப் பழிவாங்க நினைத்தார்.

ஒருநாள் அரசவையில் பீர்பாலை மன்னர் அக்பர் தேடியபோது, பீர்பால் வந்திருக்கவில்லை. "பீர்பால் அடிக்கடி தாமதமாக வருகிறார். அவருக்கு நீங்கள் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்" என்று மூத்த அமைச்சர் சொன்னார். மன்னருக்கும் கோபம் வந்தது. "சரி, என்ன செய்யலாம்?" என்று அந்த மூத்த அமைச்சரிடமே கேட்டார். "இன்று முழுக்க பீர்பால் கேட்கும் எதையும் செய்யாதீர்கள்" என்றார் அமைச்சர்.

தாமதமாக வந்த பீர்பால், "மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. அதனால் தாமதமாகிவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று மன்னரிடம் கேட்டார். "மன்னிக்க மாட்டேன்" என மன்னர் கோபமாக முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"ஒரு வழக்கை விவரிக்கலாமா?'' என்று பீர்பால் சொன்னபோது, "விவரிக்கக்கூடாது" என்றார் மன்னர். "சரி மன்னா, நான் என் இருக்கையில் உட்காரலாமா?" என்று அடுத்து பீர்பால் கேட்டபோது, "உட்காரக்கூடாது. இன்று முழுக்க நீ நின்றுகொண்டே இருக்க வேண்டும்" என்றார் மன்னர் அக்பர். திகைத்த பீர்பால், எல்லையில் இருக்கும் ஒரு பிரச்னை பற்றி விவரிக்க முயன்றார். ஆனால், "இன்று முழுக்க நீ என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்" என்றார் மன்னர்.

தான் இல்லாதபோது அரசவையில் ஏதோ நடந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட பீர்பால், சுற்றிலும் பார்த்தார். அந்த மூத்த அமைச்சர் தன்னைப் பார்த்துச் சிரிப்பதைக் கண்டதும், நடந்தது என்ன என்று பீர்பால் யூகித்துக்கொண்டார். உடனே அவர் பக்கம் கையைக் காட்டி, "சரி மன்னா, இன்று எனது கடைசி கோரிக்கை. அந்த அமைச்சரின் மகனைப் பொக்கிஷ அதிகாரி ஆக்குங்கள்'' என்றார் பீர்பால். மன்னர் கோபத்துடன், "எந்தக் காலத்திலும் நீ கேட்கும் இதைச் செய்ய மாட்டேன்" என்றார். இப்போது பீர்பால் சிரிக்க, அந்த மூத்த அமைச்சர் சோகத்தில் மூழ்கினார்.


இன்னொரு நாள் அக்பரும் பீர்பாலும் அரண்மனைத் தோட்டத்தில் நடந்துகொண்டிருந்தார்கள். குளிர் நடுக்கும் இரவு நேரத்தில் ஒரு குளக்கரை அருகே சென்றபோது அக்பருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. "பணத்துக்காக மனிதர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்களா?" என்று கேட்டார். "செய்வார்கள்" என்றார் பீர்பால்.

“நடுக்கும் இந்தக் குளிரில் ஓர் இரவு முழுக்க இந்த ஜில்லிடும் குளத்து நீரில் கழுத்தளவு மூழ்கும் வரை நிற்க வேண்டும். ஆயிரம் பொற்காசுகள் தந்தாலும், யாராவது இதற்குத் தயாராக இருப்பார்களா?” என்றார் அக்பர். “அப்படி ஒருவனை நான் தேடிப் பிடிக்கிறேன் மன்னா” என்றார் பீர்பால்.

பணத்தேவையில் இருந்த ஏழை ஒருவன் இந்தச் சவாலை ஏற்றான். குளத்தின் நடுவில் அவன் நடுங்கியபடி நிற்க, காவலர்கள் இரவு முழுக்க அவனைக் கண்காணித்தார்கள். குளிர் நடுக்கினாலும், அவன் சவாலில் ஜெயித்தான். “எப்படி உன்னால் குளிரைத் தாங்கி இருக்க முடிந்தது?” என்று மன்னர் கேட்டார். “குளத்தின் கரையில் எரிந்த தெருவிளக்கைப் பார்த்தேன். அது எனக்குச் சூடு தருவதாக நினைத்துக்கொண்டேன்” என்றான் அந்த ஏழை. மன்னர் கோபமாகி, “விளக்கின் சூட்டில்தான் நீ பிழைத்தாயா? உனக்குப் பரிசு கிடையாது” என்று சொல்லிவிட்டார்.

பீர்பால் இந்த முடிவில் அதிருப்தி அடைந்தார். அடுத்த நாள் அவர் ஒரு விநோதமான காரியத்தைச் செய்தார். அரண்மனைத் தோட்டத்தில் அடுப்பு ஒன்றைப் பற்ற வைத்தவர், அந்த அடுப்பிலிருந்து ஆறு அடி உயரத்தில் கயிறு கட்டி ஒரு பானையைத் தொங்கவிட்டார். அதில் அரிசியைக் கொட்டி கிளறியபடி இருந்தார். அரண்மனையில் எல்லோரும் அவர் செய்வதைப் பார்த்துச் சிரித்தார்கள்.

விஷயம் கேள்விப்பட்டு மன்னர் வந்தார். “என்ன செய்கிறாய் பீர்பால்?” என்றார். “சாப்பிடுவதற்காக அரிசியைப் பானையில் கொட்டி சாதம் வடிக்கிறேன்” என்றார் அவர். “அடுப்பிலிருந்து இவ்வளவு உயரத்தில் பானை இருந்தால், அரிசி எப்படி வேகும்?” என்று கேட்டுச் சிரித்தார் மன்னர். “குளக்கரையில் இருக்கும் தெருவிளக்கு, குளத்தின் நடுவே இருப்பவனுக்குச் சூடு தரும்போது, இந்த அடுப்பு இந்தப் பானைக்குச் சூடு தராதா மன்னா?” என்றார் பீர்பால். மன்னர் தன் தவறை உணர்ந்து அந்த ஏழைக்கு உடனே பரிசைக் கொடுத்தார்.





மூன்றாவது சம்பவம்... ஒரு திருடன் எந்த ஆதாரமும் இல்லாமல் கொள்ளையடிப்பான். அவன்தான் திருடினான் என்பது தெரியும். ஆனால், அவனுக்கு எதிராக எந்த ஆதாரங்களும் சாட்சிகளும் கிடைக்கவில்லை. திருடிய பணத்தைத் தாராளமாகச் செலவழித்து நண்பர்கள், உறவுகள், ஆதரவாளர்கள் என்று பெரிய கூட்டத்துடன் வலம் வந்தான்.

அவனை என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார் மன்னர் அக்பர். பீர்பாலிடம் யோசனை கேட்டார். அவர் சொன்ன யோசனைப்படி அந்தத் திருடனை அரண்மனைக்கு விருந்துக்கு அழைத்தார். விருந்து முடிந்ததுமே அவனுக்குத் தூக்கு தண்டனை விதித்தார்.

அவனுடைய ஆதரவாளர்கள் அரண்மனைக்கு வந்து, திருடனைத் தூக்கிலிட்டதற்கான காரணத்தைக் கேட்டனர். “விருந்துக்கு வந்த அவன் ஒரு ராஜரகசியத்தைத் திருடி விட்டான். அதனால் தூக்கிலிடப்பட்டான்” என்றார் மன்னர். “அப்படி என்ன பொல்லாத ரகசியம்?” என்று அவர்கள் கோபத்துடன் கேட்க, “அது ராஜ ரகசியம். அதைத் தெரிந்து கொண்டவர்கள் யாரும் உயிருடன் இருக்க முடியாது. நீங்கள் யாராவது தெரிந்துகொள்ள வேண்டுமா?” என்று கேட்டார் மன்னர். அவ்வளவுதான், அனைவரும் ஓட்டம் பிடித்தனர்.

நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மகாராணி வந்து, “அரசே! அது என்ன ராஜ ரகசியம்? என்னிடமாவது சொல்லுங்கள்” என்று கேட்டார். “அப்படி எந்த ரகசியமும் இல்லை” என்ற மன்னர், பீர்பால் தன்னிடம் சொன்ன யோசனையை விவரித்தார். “நியாயத்தின் மீதும், தர்மத்தின் மீதும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டுமே சட்டங்கள் பொருந்தும். ஆனால், அநியாயம் செய்பவர்களுக்கு முதலில் தண்டனையைக் கொடுங்கள். பிறகு அதை நியாயப்படுத்தும் விதிகளைத் தேடுங்கள்” என்பதே பீர்பால் சொன்ன யோசனை. ●



# மனநிலையை மாற்றும் சூழல்!

ஒரு பேருந்து நிறுத்தம். அங்கே ஐந்தாறு பேர் காத்திருக்கிறார்கள். ஒரு பேருந்து வருகிறது. அதில் பெரும்பாலான இருக்கைகள் காலியாக உள்ளன. எனவே, அந்த ஐந்தாறு பேரும் முண்டியடிக்காமல், ஒருவரை இன்னொருவர் முந்தாமல் நிதானமாகப் பேருந்தில் ஏறி இருக்கைகளில் அமர்கிறார்கள். நமக்கு முன்பாக வந்து காத்திருப்பவரும், வரிசையில் நமக்கு முன்பாக இருப்பவரும் முன்னுரிமை பெறட்டும் என்ற எண்ணம் அப்போது அவர்களுக்கு இருக்கும்.

அதே பேருந்து நிறுத்தம். இன்னொரு நாள். நீண்ட நேரமாகப் பேருந்து வரவில்லை. கூட்டம் நிறைய சேர்ந்துகொண்டே இருக்கிறது. எல்லோரும் எரிச்சலுடன் கைக்கடிகாரத்தில் நேரம் பார்க்கிறார்கள். கடைசியாக ஒரு பேருந்து வருகிறது. அதில் சில இருக்கைகளே காலியாக உள்ளன. அந்த நேரத்தில் யாரும் கண்ணியம் காப்பதில்லை, வரிசையில் நின்று ஏறுவதில்லை. அடுத்தவர்களை முந்திக்கொண்டு ஏறி இடம் பிடிக்கப் போட்டி போடுவார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு சூழலும் நமது மனநிலையை மாற்றிவிடுகிறது. வயிறு நிரம்பியிருக்கும் சூழலில் பேசும் நீதியை, பசியில் தவிக்கும்போது ஒருவர் பேசுவதில்லை. நிறைவான பணம் இருக்கும்போது சிலர் பேசும் அறம், பணம் இல்லாத சூழலில் மாறிவிடுகிறது.

தனக்கு பண இழப்பு ஏற்படுமோ என்ற பயம், அதிகாரத்தை இழந்துவிடுவோமோ என்ற அச்சம், தனக்கான உரிமை பாதிக்கப்படுமோ என்ற கவலை, இப்படிப்பட்ட பல சூழல்களில் பெரும்பாலான மனிதர்களுக்குள் இருக்கும் அந்நியன் வெளிப்படுகிறான். அவன் நம்பமுடியாத அளவுக்கு மோசமாக நடந்துகொள்கிறான்.

இப்படியெல்லாம் இல்லாமல் இயல்பு காக்கும் மனிதர்கள் மிகச் சிலர்தான். அந்த மிகச் சிலரில் ஒருவராக இருப்பது எப்படி?

- உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோரையும் கருணையுடன் அணுகுங்கள். அடுத்தவர்களின் செயல்களை அங்கீகரியுங்கள். நல்ல விஷயங்களை மனம்திறந்து பாராட்டுங்கள்.
- யாரையும் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். எந்தச் செயலையும் எதிர்மறையான எண்ணத்துடன் அணுகாதீர்கள். ஒருவரின் பேச்சுக்கு நீங்களே தவறான அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டாம். சூழலை முழுமையாக உணர்ந்து நடந்துகொள்ளுங்கள்.
- உங்களது மகிழ்ச்சிக்கு வேறு யாரோ காரணம் என நினைக்காதீர்கள். அது உங்களைச் சார்ந்ததுதான்! உங்களது வெற்றியை வேறு யாரோ ஒருவர் தருவார் என்று எதிர்பார்க்காதீர்கள். அது உங்கள் முயற்சியின் விளைவுதான்!
- யாரையும் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக நினைக்காதீர்கள். எதற்காகவும் யாரையும் புகார் சொல்லாதீர்கள். நீங்கள் கேட்டால்தான் உதவிகள் கிடைக்கும், நீங்கள் உழைத்தால்தான் நன்மைகள் நடக்கும்.
- எப்போதும் கடந்த காலத்தில் வாழாதீர்கள். உங்கள் வாழ்வில் எது நடந்தாலும், அது ஏதோ ஒரு காரணத்தால்தான் நடந்திருக்கிறது என்று நம்புங்கள். மறந்து, மன்னித்துக் கடந்து செல்லுங்கள்.
- ஒதுங்கித் தனிமையில் இருக்காதீர்கள். சுற்றமும் நட்பும் உறவுகளும் பாதுகாப்புத் தரும். மற்றவர்களின் உதவியின்றித் தனிமரமாக வளர்ந்து ஜெயித்தவர்கள் யாருமில்லை. சமூகத்துடன் ஒட்டுறவாக இருங்கள். ●

குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர்கள், ''நன்றாகப் படித்தால்தான் வாழ்வில் நல்ல எதிர்காலம் அமையும்'' என்று சொல்லிச் சொல்லி வளர்ப்பார்கள். அப்படிப் படித்து உயர்ந்த சில உதாரண மனிதர்களையும் நமக்குக் காட்டுவார்கள். இன்னும் சில வீடுகளில் பெற்றோர்கள் இப்படிப்பட்ட உதாரணங்களைக் காட்ட மாட்டார்கள். ஆனால், தாங்களே சிறப்பாக வாழ்ந்து, தங்கள் பிள்ளைகளுக்கு உதாரணமாக இருப்பார்கள். எப்படிப்பட்ட உதாரணமாக இருந்தாலும், ஏதோ ஒரு சூழலைப் பார்த்தே பிள்ளைகள் வளர்கிறார்கள்.

இப்படி நம் வாழ்வில் பெரும்பாலான விஷயங்கள், நம்மைச் சுற்றியுள்ள சூழலைப் பார்த்தே அமைகின்றன. நம் விருப்பங்கள், தேடல்கள், இலக்குகள், முடிவுகள் என்று எல்லாவற்றுக்கும் நாம் இருக்கும் சூழலுடன் தொடர்பு உள்ளது. நேரடியாக ஏதோ ஒன்றைப் பார்க்காமல் பெரும்பாலான முடிவுகளை நாம் எடுப்பதில்லை.

நண்பர்களோ, அக்கம்பக்கத்தினரோ வாங்கிய வாகனத்தைப் பார்த்துவிட்டே பலரும் அதேபோல வாகனம் வாங்குவார்கள். அவர்களுக்கு அந்த வாகனம்தான் விருப்பமானதா என்று கேட்டால், பதில் சொல்லத் தெரியாது. அவர்களுக்கு வாகனம் அவசியம்தானா என்று கேட்டாலும், அவர்களிடம் பதில் இருக்காது.

போன் கொஞ்சம் பழசானாலே அதைத் தூக்கிப் போட்டுவிட்டுப் புது போன் வாங்குகிறார்கள் பலர். தங்கள் நெருங்கிய வட்டத்தில் வேறொருவர் வாங்கியிருக்கும் புது போன் அவரைச் சபலப்படுத்துகிறது. நண்பர் புது வீடு வாங்கினால், வாடகை வீட்டில் குடியிருப்பவர் உடனே வீடு வாங்கச் சபதம் எடுக்கிறார். டி.வி., வீட்டு உபயோகப் பொருட்கள் என்று ஒவ்வொன்றை வாங்குவதிலும் இப்படிச் சூழலின் தாக்கம் இருக்கிறது.

''உங்க பக்கத்து வீட்டுல இருக்கு, எதிர் வீட்டுல இருக்கு, மாடி வீட்டுல இருக்கு, கீழ் வீட்டுல இருக்கு, உங்க வீட்ல இல்லையா?'' என்று கேள்வி கேட்கும் விளம்பரங்கள், ஒரு பொருளை வாங்கியே ஆகவேண்டிய கட்டாயத்தில் உங்களைத் தள்ளுகின்றன. ஏனெனில், 'எல்லோர் வீட்டிலும் இருக்கும் பொருள் நம் வீட்டிலும் இருந்தாக வேண்டும்' என்று நினைப்பவர்கள் அதிகம். 'அந்தப் பொருள் நமக்கு அவசியமா?' என நினைப்பவர்கள் குறைவு.

'பெரும்பாலான மனிதர்கள் தங்கள் கார்களைப் பயன்படுத்துவது குறைவு, அவை 95% நேரம் சும்மாவே நிறுத்தப்பட்டுள்ளன' என்கிறது ஆய்வு ஒன்று. ஆனால், கார் வாங்குவது குறையவில்லை. ஓ.டி.டி தளங்களில் திரைப்படம் பார்ப்பதற்காகப் பணம் கட்டுவோரில் பலரும் ஆண்டில் சில மணி நேரங்கள் மட்டுமே படங்கள் பார்க்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பணம் செலுத்துகிறார்கள். இப்படி ஒவ்வொரு முடிவும் சூழலைப் பார்த்தும், மற்றவர்களின் தாக்கத்திலுமே எடுக்கப்படுகிறது.

மதுப்பழக்கம், புகைப்பழக்கம் போன்றவையும் இப்படி மற்றவர்களைப் பார்த்தே பழகுகின்றன. நண்பர்களோ, திரைப்படங்களில் நடிகர்களோ செய்வதைப் பார்த்தே பலரும் அவற்றுக்கு அடிமையாகிறார்கள்.

இன்னொரு பக்கம் சில நல்ல விஷயங்களையும் சூழலையும் பார்த்துப் பலர் பழகுகிறார்கள். நண்பர்கள் பணம் சேமிப்பதைப் பார்த்துத் தாங்களும் சேமிக்கிறார்கள். உடற்பயிற்சி, நல்ல உணவுப்பழக்கம், மருத்துவப் பரிசோதனைகள் என்று பலவற்றையும் நண்பர்களைப் பார்த்துச் செய்கிறார்கள்.

சூழலில் இருந்து நல்ல பண்புகளை அறிந்து பழகிக்கொள்ள வேண்டும் என்பதே இதிலிருந்து தெரியும் நீதி.

# சூழல் நமக்குத் தரும் இலக்கு!






# அறிவுத் திருக்கோயில் வெள்ளி விழாவில் ராம்ராஜ்!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள், குடும்ப அமைதி மற்றும் உலக அமைதிக்கான பயிற்சிகளை வழங்குவதற்காக அறிவுத் திருக்கோயில்களை நிறுவினார். அந்த வகையில், திருப்பூரின் அமர்ஜோதி நகரில் 25 ஆண்டுகளாக அறிவுத் திருக்கோயில் செயல்பட்டு வருகிறது. இதன் வெள்ளி விழா 31.03.2025 திங்கட்கிழமை அன்று காயத்ரி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது.

உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவருமான திரு.K.R.நாகராஜன் அவர்கள் இந்த விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். அப்போது அவர், அமர்ஜோதி நகர் அறிவுத் திருக்கோயிலின் செயல்பாடுகளைப் பாராட்டிப் பேசினார். மேலும், திருப்பூரில் பிரதானத் தொழிலாக விளங்கும் நெசவுத் தொழிலின் சிறப்பு குறித்து அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் எழுதிய கவிதைகளைக் குறிப்பிட்டு, அருட்தந்தைக்கும் திருப்பூருக்கும் இடையே உள்ள தொடர்புகளைத் தனது உரையில் நினைவு கூர்ந்தார். அறிவுத் திருக்கோயிலின் செயல்பாடுகளில் சிறப்பாகப் பங்கேற்றவர்களுக்கு நினைவுப்பரிசுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

இவ்விழாவில், கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் டாக்டர் B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள், வெள்ளி விழா மலரை வெளியிட்டுச் சிறப்புரை வழங்கினார்.






# ஐகானிக் பிராண்ட் விருது பெற்ற ராம்ராஜ் காட்டன்!

கோவையில் உள்ள இந்தியத் தொழில் வர்த்தக சபை மற்றும் கோவை அட்வர்டைசிங் கிளப் சார்பில் 6வது பிராண்ட் கோவைதூதர் விருது வழங்கும் விழா கோவையில் நடந்தது. வணிகம், புதுமை மற்றும் சமூக மேம்பாட்டில் சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விழா மார்ச் 28–ம் தேதி நடைபெற்றது. புகழ்பெற்ற வணிக நிறுவனங்களின் தலைவர்கள், தொழில்முனைவோர் மற்றும் கோவையின் முக்கியப் பிரமுகர்கள் என்று பலர் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில், மதிப்புமிக்க 'ஐகானிக் பிராண்ட்' விருது, ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் லிமிடெட் தலைவர் திரு.ஆர்.தினேஷ் அவர்கள் இந்த விழாவில் பங்கேற்று விருதை வழங்க, ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் பெற்றுக் கொண்டார். தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டியைச் சமகால நாகரிகத்தின் அடையாளமாக மாற்றியுள்ள திரு.கே.ஆர்.நாகராஜனின் முயற்சியை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டது.

திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் பெருமைமிகு இந்த விருதுக்காகத் தனது நன்றிகளைத் தெரிவித்தார். அவர்



உரையாற்றுகையில், "பாரம்பரியத்தை உயிர்ப்பிக்கும் நெசவாளர்களையும், உள்ளூர் கைவினைஞர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதே ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் முக்கியமான நோக்கம். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து, அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்கி வருகிறோம்" என்று தெரிவித்தார்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்துவரும் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், போற்றுதலுக்குரிய விநியோகஸ்தர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள் அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.



# உலகின் சூழலுக்கு மனிதர்கள் செய்வது என்ன?

'இந்த உலகிலேயே மிக ஆபத்தான உயிரினம் எது' என்று கேட்டால், சிலர் சுறா மீன்களைச் சொல்வார்கள். மனிதர்களுடன் நேரடியாக நிகழும் மோதல்களில் அதிகம் பேரை சாகடிக்கும் உயிரினம் அதுதான். இன்னும் சிலரைக் கேட்டால், 'கொசு' என்று பதில் சொல்வார்கள். 'இந்தப் பிரச்னை எல்லாம் எனக்குக் கொசு மாதிரி' என்று அலட்சியம் செய்யும் அளவுக்கு மிகச்சிறிய உயிரிதான் அது. ஆனால், டெங்கு முதல் மலேரியா வரை பல மோசமான நோய்களைப் பரப்பி அதிகம் பேரைக் கொல்வது அதுதான்.

ஆனால், "இவை எதுவுமே ஆபத்தான உயிரினம் இல்லை. நாம் ஆபத்து என்பதை, நமக்கு ஏற்படும் ஆபத்து என்பதை வைத்தே மதிப்பிடுகிறோம். ஆனால், இந்தப் பூமிக்கு யார் அதிகம் ஆபத்து ஏற்படுத்துகிறார்கள் என்பதை வைத்தே 'உலகிலேயே மிக ஆபத்தான உயிரினம் எது' என்பதை மதிப்பிட வேண்டும். அப்படிப் பார்த்தால் மனிதன்தான் இந்த உலகின் ஆபத்தான உயிரினம்" என்கிறார்கள் உயிரியலாளர்கள்.

அது ஏன் என்பதை அறிவதற்கு முன்பு, கோழிகளின் கதையைப் பார்த்துவிடுவோம். இப்போது கீழடியில் அகழாய்வு செய்கிறார்கள். அந்த அகழாய்வில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம் முன்னோர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், மணிகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். அவற்றை வைத்து அவர்களின் வாழ்வியலை ஆய்வு செய்கிறார்கள்.

இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து வரும் மனிதர்கள், நம் காலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அகழாய்வு மேற்கொண்டால் என்னென்ன கிடைக்கும்? குளிர்பான டின்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள், பாலித்தீன் பைகள், பாட்டில் மூடிகள் என ஏராளமான பிளாஸ்டிக் மற்றும் உலோகப் பொருட்களுடன் கோழிகளின் எலும்புகளும் நிறைய கிடைக்கும். அந்த அளவுக்கு கோழிகள் நம் வாழ்வில் நீக்கமற நிறைந்துள்ளன.

உணவுத்தேவைக்காகக் கோழிகளை வளர்த்து, சிக்கனில் விதவிதமான உணவுகளைக் கண்டுபிடித்துச் சாப்பிட ஆரம்பித்த பிறகு இந்தப் பூமியே மாறிவிட்டது. இந்த உலகில் எந்த நேரத்திலும் சுமார் 2,500 கோடி கோழிகள் வாழ்கின்றன. பல நூறு கோடி கோழிகள் ஆண்டுதோறும் வெட்டப்பட்டு உணவாக மாறுகின்றன. ஆடுகளும் பன்றிகளும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன என்றாலும், அவற்றுடன் ஒப்பிடும்போது கோழிகள் நூறு மடங்கு அதிகம். ஏழே வாரங்களில் வளர்ந்து உணவாகிவிடும் தன்மை கோழிகளுக்கு உண்டு. அதனால்தான் இத்தனை வெறித்தனம்!

ஒரு காலத்தில் காடுகளில் பயணப்புறா என்ற பறவை சுமார் 500 கோடி என்ற எண்ணிக்கையில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். துப்பாக்கி கண்டறியப்பட்ட பிறகு அதிகம் வேட்டையாடப்பட்ட பறவை அதுதான். இப்போது அழிந்துவிட்ட அந்தப் பயணப்புறாவே அப்போது காடுகளில் அதிகம் வசித்த பறவையாகக் கருதப்பட்டது. இப்போது அதைவிடப் பல மடங்கு அதிகமாக கோழிகள்

இருக்கின்றன. ஆடு, பன்றி என இறைச்சிக்காக வளர்க்கப்படும் விலங்குகளும், மாடு போன்ற வீட்டு விலங்குகளும், வனவிலங்குகளைவிட எண்ணிக்கையில் அதிகரித்துவிட்டன.

தென் கிழக்கு ஆசியக் காடுகளில் சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்பு வசித்த சிவப்புக் காட்டுக் கோழிகளே முதன்முதலில் வீடுகளில் கொண்டுவந்து வளர்க்கப்பட்டன. மனிதர்கள் அவற்றை முட்டை மற்றும் இறைச்சி தேவைக்காக வீடுகளில் வளர்த்துப் பழக்கினார்கள். மனிதர்களுடன் இணைந்து வாழ அவையும் பழகிவிட்டன. முட்டையும் இறைச்சியும் வீட்டுத் தேவையைத் தாண்டி வணிகப்பொருளாகச் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு மாறின. முட்டை தேவைக்காகவும், இறைச்சி தேவைக்காகவும் தனித்தனிக் கோழி இனங்களை உருவாக்கி, அவற்றைப் பண்ணைகளில் வைத்து வளர்க்கும் முறை அறிமுகமானது.

பொதுவாக ஓர் உயிரினம் பரிணாம வளர்ச்சியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தே பல மாற்றங்களைச் சந்திக்கும். மனிதர்களின் உடலில் முடி குறைய ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின. ஆனால், கோழிகள் அதிக எண்ணிக்கையிலும், பல இனங்களாகவும் உருவாகி வளர்வதால், அவை மிக வேகமாகப் பரிணாம வளர்ச்சியைச் சந்திக்கின்றன. இந்தக் கோழிகளின் மூதாதையரைப் பார்த்தால், நாம் கோழி என்றே சொல்ல மாட்டோம். அந்த அளவுக்கு மாற்றங்கள்.

“சுற்றுச்சூழல், காலநிலை என்று எல்லாவற்றையும் மனிதன் மாற்றுகிறான். இதனால் இந்தப் பூமியின் தன்மையே மாறியிருக்கிறது. மனிதன் சுறாக்களைவிட நூறு மடங்கு ஆபத்தானவன்” என்கிறார் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகச் சூழலியல் மற்றும் நீரியல் மையத்தின் ஆய்வாளர் ராப் குக்.

வனவிலங்குகளில் மூன்றில் இரண்டு பங்கு உயிரினங்களை உணவு மற்றும் மருந்துத் தேவைக்காக மனிதர்கள் பயன்படுத்துகிறோம். இன்னொரு பக்கம் செல்லப்பிராணிகளாக வளர்க்கவும் அவற்றைக் கடத்துகிறோம். இதனால் பல உயிரினங்கள் அழியும் ஆபத்தில் இருக்கின்றன.

பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன விலங்குகள், மீன்கள் என்று சுமார் 50 ஆயிரம் உயிரினங்களைப் பற்றி ஆய்வு செய்த உயிரியலாளர்கள், அவற்றை மனிதர்கள் ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்துவதைக் கண்டறிந்துள்ளார்கள். இவற்றில் 14,663 உயிரினங்கள் இன்று அழிவின் விளிம்பில் இருப்பதற்கு மனிதர்களே காரணம். அதனால் சுறா, புலி, சிங்கம் போன்ற வேட்டை விலங்குகளைவிட மனிதன் 300 மடங்கு ஆபத்தானவனாக இருக்கிறான்.

இன்னொரு பக்கம், வரலாற்றில் எந்தக் காலத்தை விடவும் வளர்ப்பு உயிரினங்கள் அதிகரித்திருப்பதால், அவை இயற்கையின் தன்மையே மாற்றியுள்ளது. “வன உயிரினங்களைத் தொடர்ந்து அழிப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். பல்லுயிர்ப் பெருக்கமே இயற்கையைச் சீராக வைக்கும். மனிதர்களுக்கும் இயற்கைக்குமான உறவு ஆரோக்கியமாக இருப்பதே நமக்கும் நல்லது, இயற்கைக்கும் நல்லது” என்கிறார் ராப் குக்.

சூழலின் மகத்துவம் அறிந்து இயற்கையைப் போற்றுவோம்! ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)






# நாம் தொலைத்த நீர்நிலைகள்!

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளைத் தொட்டபிறகும், இந்தியாவில் எத்தனை நீர்நிலைகள் இருக்கின்றன என்பது தொடர்பான தெளிவான கணக்குகள் நம்மிடம் இல்லை. இந்த நிலையை மாற்றுவதற்காக, இந்தியாவின் முதல் நீர்நிலைகள் கணக்கெடுப்பை மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகம் நடத்தியது. கடந்த 2017–18ம் நிதியாண்டில் தொடங்கப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிக்கை வெளியானது. இதற்கு முன்பு தனியார் அமைப்புகள் தனித்தனியாகச் செய்தவை போல இல்லாமல், முழுமையாக அரசால் செய்யப்பட கணக்கெடுப்பு இது. எனவே, இந்தியாவின் நீர் நிலைமை குறித்த ஆவணம் என்று இதைச் சொல்லலாம்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் தண்ணீர் முக்கியமானது. காலையில் விழித்துப் பல் துலக்குவது முதல், இரவில் குடித்துவிட்டுத் தூங்கப் போவது வரை எல்லாத் தேவைகளுக்கும் நமக்குத் தண்ணீர் தேவை. கடல்களைத் தவிர்த்துவிட்டு இதர நன்னீர் ஆதாரங்களைப் பார்த்தால், இந்தியாவின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. உலகின் மக்கள்தொகையில் 18% பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். ஆனால், உலகின் நீராதாரங்களில் வெறும் 4% மட்டுமே இந்தியாவில் உள்ளன.

இவற்றை வைத்து இத்தனை பேரின் தண்ணீர்த் தேவைகளைத் தீர்ப்பது எளிதல்ல. அதை ஓரளவேனும் நேர்த்தியாகச் செய்வதற்கு, நம் நீராதாரங்கள் குறித்த விவரங்கள் தேவைப்படுகின்றன. பெரிய அணைகள், சிறிய அணைகள், நதிகள் போன்றவை குறித்த விவரங்கள் அரசிடம் உள்ளன. மற்ற நீர்நிலைகள் குறித்த விவரங்கள் இருந்தால், அவற்றைப் பாதுகாக்கவும் புனரமைக்கவும் திட்டங்கள் தீட்ட முடியும். இதற்காகவே இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.


இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் சென்று, நீர்நிலைகளை மதிப்பிட்டு, அவற்றைப் புகைப்படங்களும் எடுத்து இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவற்றின் அளவு, தற்போதைய நிலை, தண்ணீர்க் கொள்ளளவு, பயன்பாட்டில் உள்ளதா, ஆக்கிரமிப்புகள் எந்த அளவில் உள்ளன என்று எல்லாவற்றையும் மதிப்பிட்டுள்ளார்கள்.

நீர்நிலை என்று எவற்றை இவர்கள் கணக்கிட்டார்கள்? அது இயற்கையாக உருவானதாகவோ, மனிதர்களால் உருவாக்கப்பட்டதாகவோ இருக்கலாம். எல்லாப் பக்கமும் கரைகள் இருக்க வேண்டும். அது இயற்கையான கரையாகவோ, மனிதர்களால் கல் அல்லது கான்க்ரீட்டால் அமைக்கப்பட்டதாகவோ இருக்கலாம். குடிநீர், வீட்டுப் பயன்பாடு, தொழிற்சாலைப் பயன்பாடு, விவசாயம், மீன் வளர்ப்பு, நிலத்தடி நீர் சேமிப்பு, கோயில் பயன்பாடு,

பொழுதுபோக்கு என்று அதன் தேவை எதுவாகவும் இருக்கலாம். அதாவது, ஓடிவரும் நீரையோ, மழைநீரையோ, நான்கு பக்கங்களிலும் கரைகள் அமைத்து சேமிக்கும் எதுவுமே நீர்நிலைதான்.

கடல்கள், நதிகள், முகத்துவாரங்கள், கால்வாய்கள், நீரூற்றுகள், ஓடைகள், நீர்வீழ்ச்சிகள், நீச்சல் குளங்கள், வீடுகளில் இருக்கும் நீர்த்தொட்டிகள், தொழிற்சாலை வளாகங்களில் கட்டப்படும் நீர்த்தொட்டிகள், செங்கல் சூளை மற்றும் சுரங்கப்பணிக்காகத் தோண்டப்படும் பள்ளங்களில் மழைநீர் தேங்கி உருவாகும் குட்டைகள், கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக அமைக்கப்பட்ட தொட்டிகள் போன்றவற்றை இந்தக் கணக்கில் சேர்க்கவில்லை.

- இந்தக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் மொத்தம் 24.24 லட்சம் நீர்நிலைகள் உள்ளன. நாட்டிலேயே அதிக நீர்நிலைகள் இருப்பது, மேற்கு வங்காளத்தில். உத்தரப்பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, அஸ்ஸாம் ஆகியவை அடுத்த நான்கு இடங்களில் உள்ளன.
- இந்தியாவில் இருக்கும் நீர்நிலைகளில் குட்டைகளே அதிகம். 14.4 லட்சம் குட்டைகள் உள்ளன. 3.8 லட்சம் குளங்களும், 2.9 லட்சம் சிறிய நீர்த்தேக்கங்களும், ஏரிகள் மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்ட அமைப்புகள் ஆகியவை 3.1 லட்சமும் உள்ளன.
- மேற்கு வங்காளத்தில் 7.47 லட்சம் நீர்நிலைகள் உள்ளன. இவற்றில் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் மட்டுமே 3.55 லட்சம் நீர்நிலைகள் உள்ளன. மீன் வளர்ப்பு இங்கு மாபெரும் தொழிலாக இருப்பதால், அதற்கான குட்டைகள் அதிகம். அதுவே இந்தியாவில் அதிக நீர்நிலைகள் உள்ள மாவட்டமாக இதை மாற்றியுள்ளது. ஆந்திராவின் அனந்தப்பூர் மாவட்டம் 50,537 நீர்நிலைகளுடன் இரண்டாம் இடத்திலும், மேற்கு வங்காளத்தின் ஹவுரா மாவட்டம் 37,301 நீர்நிலைகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- குட்டைகள் எண்ணிக்கையில் மேற்கு வங்காள மாநிலம் முதலிடத்திலும், குளங்கள் எண்ணிக்கையில் ஆந்திரா முதலிடத்திலும், ஏரிகள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடத்திலும் உள்ளன. நிலத்தடி நீர் சேமிப்புக்காக நீர்நிலைகளை உருவாக்குவதில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவின் நீர்நிலைகளில் பெரும்பாலானவை தனியாருக்குச் சொந்தமானவை என்பது ஆச்சர்யம். 13.4 லட்சம் நீர்நிலைகள் தனியார் வசம் உள்ளன. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 10.9 லட்சம் நீர்நிலைகளில் 6.8 லட்சம் நீர்நிலைகள் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டிலும், மற்றவை பல்வேறு அரசுத் துறைகளின் பராமரிப்பிலும் உள்ளன.



# வாசகர் கடிதம்

'ரசிப்பு என்பது மிக முக்கியமான வாழ்வியல் திறன். அந்தத் திறனை வளர்த்துக் கொண்டவர்கள் மிகப்பெரிய செல்வந்தர்கள்' என்று 'வெண்மை' ரசனை சிறப்பிதழில் திரு.கே.ஆர்.நாகராஜன் கடிதத்தில் சொன்ன கூற்று நூற்றுக்கு நூறு உண்மை.

***- இரா.நாகராஜன், தில்லை நகர், திருச்சி.***

எது நல்ல ரசனை, ரசனைக் குறைபாடு எது எனச் சொல்லியிருந்த விதம் சிறப்பு. 'குழந்தைகளுக்குச் சிறுவயதிலிருந்து பெற்றோர்கள்தான் ரசனையைப் பழக்க வேண்டும்' என்ற வரியை எங்களுக்கான பாடமாக எடுத்துக்கொண்டோம்.

***- எஸ்.திரிபுரசுந்தரி, குகை, சேலம்.***

வாழ்க்கையில் நாம் எதை விரும்புகிறோம், எதை வெறுக்கிறோம் என்பது குறித்த புரிதலைக் கொடுத்தது 'வெண்மை' ரசனை சிறப்பிதழ். ரசனை என்ற எளிய விஷயத்தை இத்தனைக் கோணங்களில் பார்க்க முடியுமா என்ற வியப்பையும் ஏற்படுத்தியது. ஒவ்வொரு மாதமும் 'வெண்மை' எங்களுக்குத் தருவது ஆச்சர்யப் பொக்கிஷம்.

***- வெ.கமலக்கண்ணன், சென்னை-78.***

- இந்தியாவில் உள்ள நீர்நிலைகளில் பத்தில் ஒன்று மட்டுமே குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. பாதிக்கும் மேற்பட்டவை மீன் வளர்க்கும் குட்டைகள். விவசாயத் தேவைகளுக்கும், நிலத்தடி நீர் சேமிப்பிற்கும் 28.6% நீர்நிலைகள் உதவுகின்றன.
- இந்திய நீர்நிலைகளில் வெறும் 48% மட்டுமே ஆண்டுதோறும் முழுமையாக நிரம்புகின்றன. மற்றவை பெரும்பாலான காலம் சொற்ப நீருடன்தான் இருக்கின்றன.
- இந்தியா முழுக்க 38,496 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 95% கிராமப்புறங்களில் உள்ளன. உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆக்கிரமிப்புகள் அதிகம். அடுத்தடுத்த இடங்களில் தமிழ்நாடும் ஆந்திராவும் இருக்கின்றன.

நாம் தொலைத்த நீர்நிலைகள் குறித்துக் கவலைப்படுவது போலவே, மிச்சம் இருக்கும் நீர்நிலைகளைக் காப்பதில் அக்கறை காட்டுவோம். ●

பிழைப்பு தேடி மொழி தெரியாத தொலைதூர நகரத்துக்குப் போனான் ஒருவன். சொந்த ஊரிலிருந்து அவனை வழியனுப்பி வைத்த நண்பன், ''உனக்காகச் சில பொருட்களை இதில் வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிச் சிறிய பை ஒன்றை அவனிடம் கொடுத்தான். அதிலிருந்து விபூதி வாசனை அடிக்கவே, 'கடவுளிடம் நமக்காக வேண்டிக்கொண்டு விபூதி பிரசாதத்தை நண்பன் கொடுத்திருக்கிறான்' என அவன் நினைத்துக்கொண்டான்.

புதிய ஊரில் அவன் எதிர்பார்த்தபடி வேலை அமையவில்லை. இவன் நம்பிச் சென்ற ஏஜென்ட் ஒருவன் ஏமாற்றிவிட்டான். மொழி தெரியாத ஊரில் எப்படி சரியான மனிதர்களைத் தேடிச் சென்று வேலை கேட்பது என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்குத் தெரிந்தவர்களும் யாருமில்லை. கையில் எடுத்துச் சென்ற பணமெல்லாம் செலவாகிவிட, அடுத்த வேளை உணவுக்கே வழியில்லாத நிலை.

இனி கடவுளைச் சரணடைவோம் என நினைத்தவனுக்கு, நண்பன் கொடுத்தனுப்பிய பை அப்போதுதான் நினைவுக்கு வந்தது. தன் பொருட்களிலிருந்து அதைத் தேடி எடுத்து விபூதியை இட்டுக்கொள்வோம் என்று பையைத் திறந்தான். உள்ளே விபூதிப் பொட்டலத்துடன் சில 500 ரூபாய் நோட்டுகளும் இருந்தன. கஷ்டமான சூழலில் கைகொடுக்க உதவும் என்ற நினைப்பில் நண்பன் ரகசியமாகப் பணம் கொடுத்து அனுப்பியதை நினைத்து நெகிழ்ந்தான் அவன். அடுத்த சில நாட்களில் வெறியோடு அலைந்து வேலையைத் தேடிக்கொள்ளும்வரை அவனுக்கு உதவியது, நண்பன் கொடுத்த பணம்தான்.

இது இன்னொரு நண்பரின் கதை. பக்கத்து ஊரில் இருக்கும் தன் குடும்ப நண்பர் சரவணனுக்கு போன் செய்த மகேஷ், "இன்று மாலை உங்கள் ஊரில் இருக்கும் கோயிலுக்குக் குடும்பத்துடன் வருவேன். அப்படியே உங்கள் வீட்டுக்கும் வருகிறேன்'' என்றார். ''ரொம்ப சந்தோஷம், எல்லோரும் வாங்க'' என உற்சாகமாக வரவேற்ற சரவணன், "வரும்போது எனக்காக ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

"என்ன விஷயம்?" என்று மகேஷ் கேட்டார். "என் மகன் ஒரு நுழைவுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைந்திருக்கிறான். சிறந்த கல்லூரியில் அவனுக்கு அட்மிஷன் கிடைத்திருக்கிறது. இதை கேக் வெட்டி கொண்டாட வேண்டும். எங்கள் ஊரில் நல்ல பேக்கரி கிடையாது. உங்கள் ஊரில் இருக்கும் ஒரு கடையில் விற்கும் கேக் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அதை வாங்கி வர முடியுமா? அவனை அதை வைத்து சர்ப்ரைஸ் செய்யப் போகிறேன்" என்றார் சரவணன்.

அதேபோலச் சரவணன் கேட்ட கேக்கை இரண்டு கிலோ அளவில் பெயரெல்லாம் எழுதி வாங்கிப் பத்திரமாக

# சூழல் அறிந்த நட்பு!







எடுத்துக்கொண்டு போனார் மகேஷ். அது இரண்டாயிரம் ரூபாய் விலை இருக்கும் என்பதையெல்லாம் அவர் எதிர்பார்க்கவில்லை. ஊருக்குப் போய் நண்பர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு, கோயிலுக்கும் போய்வந்து, கேக் வெட்டிக் கொண்டாட்டங்கள் முடிந்து மகேஷ் ஊருக்குக் கிளம்பத் தயாரானார்.

கேக் என்ன விலை என்று கேட்டுச் சரவணன் பணம் கொடுப்பார் என்று மகேஷ் எதிர்பார்த்தார். ஆனால், ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, "கேக் நிறைய வாங்கி வந்து விட்டீர்கள். இதில் கொஞ்சம் வைத்துள்ளேன். வீட்டுக்குப் போய்ச் சாப்பிடுங்கள்'' என்று கொடுத்த சரவணன், பணத்தைப் பற்றிப் பேசவே இல்லை.

மகேஷுக்கு ரொம்பவே ஆதங்கம். ''வீட்டுக்கு வருகிறேன் என்று சொன்னதற்கு இவ்வளவு பெரிய செலவு வைத்துவிட்டானே" என்று ஊருக்குத் திரும்பும் வழியில் மனைவியிடம் தன் நண்பனைச் சபித்துக்கொண்டே வந்தார். "விடுங்கள். அவர் ஒருவேளை மறந்திருப்பார். அப்புறமாகக் கேட்டுவிட்டு அனுப்பி வைப்பார்'' என ஆறுதல் சொன்னார் மனைவி. இருந்தாலும் அவரால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

வீட்டுக்கு வந்து அந்தப் பாத்திரத்தைத் திறந்து பார்த்தபோது அதில் கேக்குடன் பணமும் ஒரு கடிதமும் இருந்தது. 'நண்பா, கேக் விலை என்ன என்று கேட்டுப் பணம் கொடுத்து உன்னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. நீ வாங்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். எனவே இதில் பணம் வைத்துள்ளேன்' எனக் கடிதத்தில் எழுதியிருந்தது.

அதைப் படித்ததும் மகேஷ் அவமானம் அடைந்தார். "அவன் என்னை எவ்வளவு உயர்வாக மதித்திருக்கிறான். நான்தான் அவனைத் தவறாக நினைத்துவிட்டேன். உடனே அவனுக்கு போன் செய்து மன்னிப்புக் கேட்கப்போகிறேன்" என்று மனைவியிடம் சொன்னார். "அதை மட்டும் செய்யாதீர்கள். அவரைப் பற்றித் தவறாக நினைத்துவிட்டதாக இப்போது நீங்கள் சொன்னால்தான் அவர் வேதனைப்படுவார். உங்கள்மீது அவர் வைத்துள்ள மதிப்புக் குறைந்துவிடும். அவசரப்பட்டு யூகத்தின் அடிப்படையில் தவறான முடிவுக்கு வராதீர்கள்" என்று மனைவி அவரைத் தடுத்தார்.

எந்தச் சூழலிலும் எவரையும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்ற பாடத்தை அன்று மகேஷ் கற்றார்.

'வாழ்க்கையில் நீங்கள் எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும், கிருஷ்ண பரமாத்மா போல ஒரு நண்பனையும், கர்ணன் போல ஒரு நண்பனையும் தேடிக்கொள்ளுங்கள்' என்று பெரியோர்கள் சொல்வார்கள். மகாபாரதப் போரில் பாண்டவர்களின் துணையாக கிருஷ்ணன் நின்றான். கிருஷ்ணன் அவர்களுக்காகப் போரிடவில்லை. ஆனால், அந்தக் கிருஷ்ண பரமாத்மாவே அவர்களை வெற்றிபெற வைத்தான். இன்னொரு பக்கம் கௌரவர்களின் துணையாக கர்ணன் நின்றான். தன் நண்பன் தவறே செய்திருந்தாலும், அவனை விட்டுக் கொடுக்காமல், அவனுக்காகத் தன் உயிரையும் கொடுத்துப் போர் புரிந்த நட்புக்குச் சொந்தக்காரன் கர்ணன்.

வாழ்க்கையில் பலவிதமான போர்களை நாம் செய்கிறோம். ஒவ்வொன்றும் வித்தியாசமான களத்தில் நிகழ்கிறது. அத்தனை போராட்டங்களையும் நாம் தன்னந்தனியாகக் கடந்து வருவது சாத்தியமில்லை. நமக்கு வழிகாட்டவும், நெருக்கடியான தருணங்களில் நம் தோள்களைத் தாங்கவும் நண்பர்கள் தேவை. தவறான திசையில் நாம் போக நேர்ந்தால், நம்மைக் கண்டித்து நெறிப்படுத்திச் சரியான பாதைக்குத் திருப்பி விடவும் நண்பர்களே உதவுகிறார்கள். ஒருவேளை நாம் தவறு செய்துவிட்டாலும், நம்மை விட்டுக்கொடுக்காமல் ஆதரிப்பதும் நண்பர்கள்தாம்.

கிருஷ்ண பரமாத்மா போலவும், கர்ணன் போலவும் அக்கறையான நண்பர்களை நாம் பெற வேண்டும். நாமும் அப்படிப்பட்ட நண்பர்களாகப் பலருக்கு இருக்க வேண்டும். உறவுகளும் நட்பும் ஃபிக்ஸட் டெபாசிட் போன்றவை. நாம் முதலீடு செய்தால்தான், அதிகமான வட்டியுடன் அவை நமக்குப் பலன் தரும்.



## அனுபவம் பெறுங்கள்!

'இந்தப் பிரச்னைக்கு இதுதான் தீர்வு' என எல்லா நேரங்களிலும் கச்சிதமாக நம்மால் முடிவெடுக்க முடியாது. பல்வேறு சூழல்களில் வெவ்வேறு முயற்சிகளைச் செய்து பார்த்து, நாம் சில தீர்வுகளைக் கண்டறிகிறோம். இப்படிக் கிடைக்கும் அனுபவங்கள்தான், எதிர்காலத்தில் சிறந்த முடிவுகளை எடுப்பதற்கு நமக்கு உதவுகிறது. ஒரு முடிவை எடுக்கும்போது அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்ற படிப்பினையும் அனுபவங்கள் வழியாகவே நமக்குக் கிடைக்கிறது.

இளமையில் பலரும் முடிவெடுக்கத் தெரியாமல் குழம்புவதற்குக் காரணம், அனுபவங்கள் கிடைக்கும் சூழல்கள் அவர்களுக்கு அமையாததுதான். வாழ்வில் நல்லது, கெட்டது, சிறந்தது, மோசமானது என எல்லாவற்றையும் சந்தித்த முதியோர்கள் பெரும்பாலும் தெளிவாக முடிவெடுக்கிறார்கள்.

## வெற்றிச்சூழலை உருவாக்கும் விதிகள்!

- வாழ்வில் தேங்கி நிற்காதீர்கள். புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளுங்கள், புதிய விஷயங்களை முயற்சி செய்யுங்கள். எந்தச் சூழலிலும் நீங்கள் சிறந்தவராக மாறுவீர்கள்.
- உங்கள் இலக்குகளை அடைய வேண்டும் என்றால், இன்றிலிருந்தே அதற்காக உழையுங்கள். உழைப்பால் மட்டுமே அந்த இடத்தை அடைய முடியும்.
- வெற்றிக்கான பாதையில் பொறுமையும் விடாமுயற்சியும் மட்டுமே உங்கள் வாகனங்களாக இருக்கட்டும்.
- சின்ன வேலையோ, பெரிய வேலையோ, எதையும் தாமதிக்காமல் உடனே முடித்துவிடுங்கள். சோம்பல் குணம் உங்களின் முதல் எதிரி, அந்த எதிரியைத் துரத்தி அடியுங்கள்.
- பெரிய ரிஸ்க்குகளை எடுக்காமல், சிறந்த உயரங்களை அடைய முடியாது. எந்தச் சூழலிலும் நம்பிக்கை இழக்காமல் உழைப்பைத் தொடருங்கள்.
- நீங்கள் செய்யும் வேலையில் ஓர் ஒழுங்கு இருக்க வேண்டும். அதை நேர்மறையான மனநிலையுடன் செய்ய வேண்டும். அப்போது எதுவும் சாத்தியமாகும்.



## அது அவர் பழக்கம்!

குறுக்கே போன நாயின்மீது மோதாமல் இருக்க, சட்டென்று காரின் பிரேக்கை மிதித்தார் டிரைவர். கார் ஒரு குலுங்கு குலுங்கி நின்றது. உள்ளே அமர்ந்து போன் பேசியபடிப் பயணித்த சுந்தர் தடுமாறி விழுந்தார். கடும் கோபமாகி டிரைவரைத் திட்டினார். "எப்பவும் வேகமா ஓட்டறதே உன் பழக்கமா இருக்கு. என் உயிரை எடுக்கப் பார்க்கிறாயா? முதல்ல கீழே இறங்கு. உனக்கு இனிமேல் வேலை இல்லை" என்று சொல்லித் துரத்தினார்.

அதே சுந்தருக்குச் சில மாதங்களில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தார்கள். பக்கத்து நகரில் இருந்த ஒரு மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்து எடுத்த சிறுநீரகத்தைச் சுந்தருக்குப் பொருத்தினார்கள். அதை அதிவேகமாக ஆம்புலன்ஸ் ஒன்றில் இரண்டு மணி நேரத்துக்குள் எடுத்துவந்து அவருக்குத் தானமாகத் தந்தார்கள்.



## சூழலை அறிந்தால் தப்பிக்கலாம்!

குளத்தில் நிறைய ஆடுகளும் சில கழுதைகளும் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தன. சத்தமில்லாமல் ஓநாய் ஒன்று அவற்றை நெருங்கியது. சலசலப்புக் கேட்டதும் மற்ற விலங்குகள் உஷாராகி ஓடிவிட்டன. ஒரே ஒரு கழுதை மட்டும் சிக்கிக்கொண்டது. 'இப்போது ஓடினாலும் ஓநாய் துரத்திப் பிடித்துவிடும்' என்பதை உணர்ந்த கழுதை, இந்தச் சூழலிலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம் என யோசித்தது.

உடனே தன் பின்னங்கால் ஒன்றைத் தாங்கித் தாங்கி வைத்தபடி வலியில் கத்திக்கொண்டே ஓநாயின் அருகில் வந்தது. "ஏன் இப்படி நொண்டி நொண்டி நடக்கிறாய்? கத்துகிறாய்?" என்று கேட்டது ஓநாய். "இந்தக் காலில் ஏதோ ஒரு முள் ஆழமாகக் குத்திவிட்டது. என்னை இந்த நிலையில் நீ அடித்துச் சாப்பிட்டால், அந்த முள் உன் தொண்டையில் சிக்கிக்கொள்ளும். அதை அகற்றிவிட்டு என்னை வேட்டையாடினால் உனக்கு நல்ல விருந்து" என்றது கழுதை.

"எங்கே, காட்டு பார்க்கலாம்" என ஓநாய் ஆசையாகக் கழுதையின் காலருகே போனது. உடனே தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து அதை ஒரு உதை உதைத்தது கழுதை. தடுமாறி ஓநாய் விழுந்த இடைவெளியில் கழுதை தப்பித்து ஓடிவிட்டது. எந்தச் சூழலிலும் நமக்கான தீர்வுகளைக் கண்டறிய முடிந்தால் தப்பிக்கலாம்.

## விடுபட முடியவில்லை!

சில நண்பர்கள் மாலை நேரத்தில் ஆற்றங்கரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆற்று நீரில் கறுப்பு நிறப் போர்வை ஒன்று அடித்துச் செல்லப்படுவதை அவர்களில் ஒருவன் பார்த்தான். "அதைப் பார்த்தால் விலையுயர்ந்த போர்வை போலத் தெரிகிறது. நான் அதை எடுக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு ஆற்றுக்குள் குதித்தான். வேகமாக நீந்திச் சென்று அதைப் பிடித்தான்.

முதலில் அவன் பிடிக்குள் அது சிக்கியது, பிறகு அந்தப் போர்வை அவனை அப்படியே சுற்றிக்கொண்டது. அவன் உடனே, "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அலற ஆரம்பித்தான். கரையில் இருந்த அவன் நண்பர்கள், "அந்தப் போர்வை போகட்டும், விட்டு விடு. நீ கரையேறி வா!" என்றனர். "நான் அதை விட்டுவிட்டேன். அதுதான் என்னை விடமாட்டேன் என்கிறது" என்று கத்தினான் அவன். மங்கிய மாலை வெளிச்சத்தில் கூர்ந்து கவனித்தபோதுதான் அது போர்வை இல்லை, உயிருள்ள ஒரு கரடி என்பது எல்லோருக்கும் புரிந்தது.

கெட்ட பழக்கங்களும் இப்படித்தான்... ஏதோ ஒரு சூழலில் அதை ஒருவர் பழக ஆரம்பிப்பார். அதன்பின் அதிலிருந்து விலக நினைப்பார், ஆனால் அவரால் விடுபட முடியாது. மனிதர்கள் இப்படித்தான் பல மோசமான பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள். நல்ல பழக்கங்களைப் பின்பற்றினால், நலமாக வாழலாம்.



ஆபரேஷன் முடிந்து அறைக்கு வந்த சுந்தரிடம், "இந்த டிரைவர்தான் ஆம்புலன்ஸில் வேகமாக சிறுநீரகத்தை எடுத்துவந்தார்" என்று டிரைவரை டாக்டர் அறிமுகம் செய்தார். "எனக்கு உயிர் கொடுக்க டிரைவரா வந்திருக்கே..." என்று கையெடுத்துக் கும்பிட்ட சுந்தர் அதிர்ந்தார். காரணம், சில மாதங்களுக்கு முன்பு அவர் வேலையை விட்டு அனுப்பிய டிரைவர்தான் அவர் எதிரே நின்றிருந்தார்.





# சூழலை அறிவதில் குழந்தையாக இருங்கள்!

ஆசிரியர் ஒருவர் ஒரு விடுமுறை நாளில் தன் வீட்டு அலமாரியில் இருக்கும் பொருட்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். அவரின் கல்லூரி நாட்களிலிருந்து பாதுகாத்து வரும் பல பொருட்கள் அந்த அலமாரியில் இருந்தன. அவற்றைச் சுத்தம் செய்து அடுக்கியபோது, ஒரு பிரேஸ்லெட் அவர் கவனத்தை ஈர்த்தது. அதுபோன்ற வெள்ளி பிரேஸ்லெட்டை அணிவது, அவர் கல்லூரி படித்த நாட்களில் ஃபேஷனாக இருந்தது. 'இப்போது இதை அணிந்து போனால், தன் வயதில் இருக்கும் சக ஆசிரியர்கள் மலரும் நினைவுகளில் மூழ்குவார்கள்' என்று நினைத்தார்.

மறுநாள் அதை ஆசையாகப் பள்ளிக்கு அணிந்து சென்றார். ஆனால், அவருக்குப் பெரும் ஏமாற்றம். சக ஆசிரியர்கள் யாருமே அதைக் கண்டுகொள்ளவில்லை. அந்த ஏமாற்றத்துடன் வகுப்பறைக்குச் சென்றார். உள்ளே நுழைந்ததுமே முதல் வரிசையில் இருந்த சிறுவன் அவரிடம், "சார், உங்க கையில் போட்டிருக்கற பிரேஸ்லெட் அழகா இருக்கு" என்றான்.

இது இன்னொரு குழந்தையின் கவனிப்பு. தங்கள் எட்டு வயதுக் குழந்தையுடன் ஹோட்டலுக்குப் போனார்கள் ஒரு தம்பதி. பழைய விஷயங்களை நினைவூட்டுவது போன்ற அலங்காரத்தில் அமைந்த ஹோட்டல் அது. அந்தக் காலக் கறுப்பு வெள்ளை டி.வி., வால்வு ரேடியோ, போன் செய்யும் எஸ்.டி.டி பூத் போன்றவற்றுடன் பல கார்ட்டூன் கேரக்டர்களின் ஓவியங்களும் இருந்தன. சூப்பர் மேன் போஸ்டருடன் எஸ்.டி.டி போன் பூத் இருக்க, அதை நெருங்கிச் சென்று ஆச்சர்யத்துடன் பார்த்தது குழந்தை.

'சூப்பர்மேனைப் பார்க்காதது போலப் பார்க்கிறாளே, மற்றவர்கள் கிண்டல் செய்வார்களே' என்று கவலைப்பட்ட அம்மா அருகில் போய், "என்னம்மா, சூப்பர்மேனை இப்படிப் பார்க்கிறே?" என்று கேட்டார். "அது இல்லம்மா, இந்த போன் பூத்தைப் பார்க்க விநோதமா இருக்கு. நீங்கள்லாம் இதுக்குள்ளயா போய் போன் பண்ணுவீங்க?" என்று கேட்டது குழந்தை.

குழந்தைகள் குதூகலம் ஆகிவிட்டால், அவர்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஒரு தந்தைக்குப் பிறந்த நாள். அதற்காக விருந்து தருவதற்காகத் தன் குழந்தைகளை அழைத்துப் போனார் அவர். உறவினர் குழந்தைகள் இரண்டும் சேர்ந்துகொள்ள, காரில் போகும்போதே அவர்களுக்குள் ஏதோ விளையாட்டுச் சண்டை வந்து கூச்சல் போடத் தொடங்கிவிட்டனர்.

தானாகச் சண்டை அடங்கிவிடும் என்று நினைத்தார் அப்பா. ஆனால், அது அடங்குவதாக இல்லை. அவர்கள் போட்ட கூச்சலில் இவரால் நிம்மதியாகக் கார் ஓட்டவே முடியவில்லை. "பசங்களா, நீங்க சண்டை போடாம அமைதியா வந்தா, அதுவே எனக்கு நீங்க கொடுக்கற பிறந்த நாள் பரிசு" என்று அன்பாகச் சொன்னார். "அது முடியாதுப்பா" என்று குழந்தைகள் உடனே மறுத்தன. "ஏன்?" என்றார் தந்தை. "உங்களுக்குத் தர்றதுக்கு ஏற்கெனவே ஒரு பரிசு வாங்கி வச்சிட்டோம். இன்னொரு பரிசு ஏன் கேட்கறீங்க?" என்றன குழந்தைகள். அப்பா வாயடைத்துப் போனார்.

குழந்தைகளின் பார்வை ஆச்சர்யங்கள் நிறைந்ததாக இருக்கிறது. சூழலைக் கூர்ந்து கவனித்து அறிவதில் ஒரு குழந்தை போல இருங்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



Inners for Winners
RAMRAJ
VESTS
BRIEFS • TRUNKS
ஒரு சிறந்த அனுபவத்தை உணருங்கள்
ராம்ராஜ் உள்ளாடைகள் மூலம்
ஒரு சிறந்த அனுபவத்தை பெறுங்கள்
உயர் ரக பருத்திகளை கொண்டு தயாரிக்கப்பட்டு,
உடுத்துவதற்கு மிருதுவாகவும்,இலகுவாகவும்
எல்லா காலத்திற்கும் ஏற்றவாறு அமைந்து,
உங்கள் தன்னம்பிக்கையை
மேலும் மெருகூட்டுகிறது
Shreyas Iyer - Cricketer
SUKRA SUPER FINE COTTON VESTS
ROMEX SUPERIOR BANIANS
RISE-UP PREMIUM BANIANS
ACOSTE LUXURY INNERWEARS
Breeze Eye Let Vests
WinStripe STRIPED BANIANS
ARCHERY GYM VEST
COMPACT PREMIUM COTTON RIB VESTS
LITTLE STARS KIDS INNERWEARS
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-05-2025. Posted at Tirupur BPC on 5th of every month.

